Koviloor Digital Library

4-4

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

வள்ளற்பெருமான் இராமலிங்க சுவாமிகள்
அருளிச் செய்த

பேருபதேசம்

(அருட்பெருஞ்ஜோதியை அறிவது எப்படி)

வள்ளலார் சிதம்பரம் இராமலிங்கம் அவர்கள் போதித்த சமரச சுத்த சத்திய சன்மார்க்கத்தை அறியவும் அனுஷ்டிக்கவும் தவறிய சன்மார்க்கிகளுக்கு ஓர் அரிய தகவல்

சன்மார்க்க வழிகாட்டி-2

விற்பனைக்கு அல்ல

2010

வெளியீடு
சமரச சுத்த சத்திய சன்மார்க்க ஆராய்ச்சி மையம்,
மதுரை

ACCNO: 12070
R 65 வள்ளலார்.

Koviloor Digital Library

Koviloor Digital Library
A. No 12070
LIBRARY, KOVILOOR
4-4

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

வள்ளற்பெருமான் இராமலிங்க சுவாமிகள்

அருளிச் செய்த

பேருபதேசம்

(அருட்பெருஞ்ஜோதியை அறிவது எப்படி)

வள்ளலார் சிதம்பரம் இராமலிங்கம் அவர்கள் போதித்த சமரச சுத்த சத்திய சன்மார்க்கத்தை அறியவும் அனுஷ்டிக்கவும் தவறிய சன்மார்க்கிகளுக்கு ஓர் அரிய தகவல்

உலக மக்கள் அனைவரும் ஒருதாய் மக்களே, அதுவே சன்மார்க்கம்
மனிதகுலத்தின் எதிர்கால மார்க்கம் சன்மார்க்கமே
உலக சமாதானம் அடையும் வழி சன்மார்க்கமே
உலக சமய சடங்காச்சார பூசலற்ற புனிதநிலையே சன்மார்க்கம்
உலகச் செழிப்பிற்கு ஒரே மார்க்கம் சன்மார்க்கம்

உதவி

இல. சிற்றம்பலம், M.A.,
(சமயமும் தத்துவமும்)
31/8, வடலூர் இல்லம்,
வள்ளலார் வீதி, டி.எஸ்.பி. நகர்,
மதுரை-625 010.

தொகுப்பு

மு. இராமன், S.F.R.C
தலைவர்-சமரச சுத்த சத்திய
சன்மார்க்க ஆராய்ச்சி மையம்
81, நாவலர் நகர் 3வது தெரு,
பைபாஸ் ரோடு, மதுரை-10

Koviloor Digital Library

முன்னுரையின் முதலுரை

சன்மார்க்கமென்பது பல்கலைக்கழகத்தில் அறிவுத்திறன் மூலம் பெறும் பட்டம் போன்றது. மதங்களும் சமயங்களும் ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி படிப்புப் போன்றது என்பதை ஒவ்வொரு சன்மார்க்கியும் புரிந்து கொண்டால் சன்மார்க்கத்தின் மேன்மையைப் புரிந்து கொண்டதாகும். ஆகவே சன்மார்க்கத்தைச் சமயங்களுடன் ஒப்பிடக் கூடாது. சன்மார்க்கத்தைப் போன்று ஒப்பும் உயர்வுடைய தத்துவம் உலகில் வேறு இல்லை. ஆகவே தமிழ்நாட்டில் தோன்றிய ஞானிகளில் வள்ளற் பெருமானுக்கு ஒப்பாரும் மிக்காருமிலர், ஒப்பு உவமை பேசுவது அஞ்ஞானத்தின் விளைவு.

முன்னுரை

சமசர சுத்த சத்திய சன்மார்க்கம் என்பது வள்ளற்பெருமான் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் கைக்கொள்ளச் சொன்னவற்றைக் கைக்கொள்ளுவதும் விட்டுவிடச் சொன்னவற்றை விட்டுவிடுவதும் ஆகும். இதனைப் பின்பற்றுபவரே சன்மார்க்கியாவர். இதனைப் பின்பற்றாதவர் சன்மார்க்கி ஆகார்.

1823ஆம் ஆண்டிலிருந்து 1865-ஆம் ஆண்டு வரை வள்ளற் பெருமான் தமது 42 வயது வரை சமயம் சார்ந்த சைவ சித்தாந்தத்தைப் பின்பற்றினார். பின் இது மலமுடையது என்று அறிந்து அதனை விடுத்து நிர்மல சிவநெறியாகிய சமசர சுத்த சத்திய சன்மார்க்கத்தைட் பின்பற்றினார். "அருட் சிவநெறிசார் அருட் பெருநிலை வாழ் அருட்சிவபதியாம் அருட்பெருஞ்ஜோதி" என அருட்பெருஞ்ஜோதி அகவலில் அருளிச் செய்துள்ளார்.

சிவநெறி-சத்திய நெறி; சமய நெறி -அசத்திய நெறி என்பதைத் தெளிவுபடுத்தியுள்ளார். இதனை "சாதியும் மதமும் சமயமும் பொய்யென ஆதியிலுணர்த்திய "அருட்பெருஞ்ஜோதி" எனும் வாசகத்தின் மூலம் அறிய முடிகிறது.

சமயங்கள் யாவும் கொல்லும் கடவுளைப் பற்றியே பேசுகிறது. அது கோபம் உடையது என்றும் கூறுகிறது. இதற்கு சமய சாஸ்திரங்களே ஆதாரம். வள்ளற்பெருமாள் இராமலிங்க சுவாமிகள் தமது அருள் ஞானத்தால் அறிந்த அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் பற்றி போதித்தருளினார். அருட்பெருஞ்ஜோதியே அருளாகவும்,

Koviloor Digital Library 4-4

கருணையாகவும் வீற்றுள்ளது எனப் போதித்து அருளினார். ஆகவே கொல்லாமையையும், புலால் உண்ணாமையையும் சன்மார்க்கத்தின் முக்கியத்திறவு கோலாகும் எனக் கூறினார்.

1. சன்மார்க்கம் சமயங்கடந்த மார்க்கம்
2. சன்மார்க்கம் ஞானமார்க்கம்
3. சன்மார்க்கம் ஒப்பற்றமார்க்கம்
4. சன்மார்க்கம் சத்தியமார்க்கம்
5. சன்மார்க்கம் சாகா மார்க்கம்

மேட்டுக்குப்பத்தில் பெருமானவர்கள் தமது இறுதிக் காலத்தில் கடைசியாக தமது அணுக்கத் தொடர்களுக்கு மதங்களையும், வேதாகமங்களையும் நிராகரித்துப் போதித்தருளினார். சத்+மார்க்கம்=சன்மார்க்கம் என்ற சொல்லாக மருவி வந்தது. ஆத்மா என்பதை ஆன்மா என்று மெய்கண்ட தேவர் மருவிக் கூறியது போல், தாயுமானவரும் திருமூலரும் சன்மார்க்கமென்றே அழைக்கின்றனர்.

பொதுவாக மனித சமுதாயத்தில் பெற்றோர்கள் தங்களது குழந்தைகள் நலமுடன் வாழவும், சுயமாகப் பொருளீட்டி வாழவும் ஆவன செய்கிறார்கள். இதற்கென அவர்கள் பொருட்செல்வம் ஈட்டி வழங்குகிறார்கள். இத்துடன் தங்களது கடன் முடிந்ததாகவும், பொதுவாகக் கருதுகிறார்கள். இத்துடன் மனிதப் பிறவியினுடைய தேவையும் நோக்கமும் முடிவடைவதில்லை. மனிதன் அறிவு சொரூபமானவன். ஆகவே அவனுக்கு உடற்பசி மட்டும் நீக்குவதில் முழுமையடையாது. அவனது அறிவுப் பசியையும் நீக்கி, அவன் வாழ்வதற்கான தேவைகள் அனைத்தையும் பெற்றோர்கள் செய்யு வேண்டுமென்பதே மனிதர்களின் முழுக் கடமையாகுமென்று கருதுவது சரியானதே.

இதனை ஏற்று என் சந்ததியர்களுக்கும் என் மக்களுக்கும் இந்த மனித சமுதாயத்திற்கும் நான் பெற்ற அறிவுச் செல்வத்தைத் (ஆன்ம ஞானம்) தடையின்றி வாரி வழங்க வேண்டுமென்று நிர்ப்பயமாக என் சொந்த முயற்சிலேயே இந்தப் புத்தகம் தயாரித்து வழங்கப்படுகிறது.

ஞானச் செல்வத்தை விலை கூறி விற்பது பிழையென எனது குரு போதித்ததால் ஞானச்செல்வமாகிய இப்புத்தகத்தை இலவசமாக வழங்குகிறேன்.

ஏற்கனவே இந்த ஞானச் செல்வத்தை வாரி வழங்க வேண்டுமென்று 2001-ஆம் ஆண்டில் "அருட்பெருஞ்ஜோதியை அறிவது எப்படி?" என்ற புத்தகம் 3300 பிரதிகள் பதிப்பித்து சன்மார்க்க அன்பர்களுக்கு வழங்கப்பட்டது. 2004-ஆம் ஆண்டில் "வள்ளற்பெருமானுக்கு சிலை வைப்பது பிழை" என்ற நோட்டீஸ் 2000 பதிப்பித்து அன்பர்களுக்கு வழங்கப்பட்டது. 2006-ஆம் ஆண்டில் வள்ளற்பெருமான் இராமலிங்க சுவாமிகள் அருளிச் செய்த "பேருபதேசம்" (சன்மார்க்க வழிகாட்டி) 12500 பிரதிகள் பதிப்பித்து வழங்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டில் "சன்மார்க்கம் என்றால் என்ன?" என்ற தலைப்பில் 25000 நோட்டீஸ் பதிப்பித்து அன்பர்களுக்கு வழங்கப்பட்டது. 2008-ல் இதே பணி தொடர்ந்து வள்ளற்பெருமான இராமலிங்க சுவாமிகள் அருளிச் செய்த பேருபதேசம் (சன்மார்க்க வழிகாட்டி-2) என்ற பெயரில் வெளியிடப்படுகிறது. அன்பர்கள் ஞானச் செல்வம் பெற்று நல்வாழ்வு வாழ வாழ்த்துகிறேன்.

சமயவாதிகள், அறியாத மானிடரை விழித்து சொர்க்கத்தில் கடவுள் உண்டு என்றும் அவன் பாவ புண்ணியத்திற்கேற்ப பலன்களை வழங்குகிறான் என்றும், சமயங்களில் கூறப்பட்ட தர்மம் என்ற கட்டளைகளை நிறைவேற்றுபவனை இரட்சிப்பதாகவும், தவறியவனை சம்ஹாரம் செய்வதாகவும் கூறுகிறார்கள். இதற்கு எதிரிடையான கருத்துக் கொண்ட உலகாயுதவாதிகள் அப்படியொரு கடவுள் இல்லையென்று கூறுகிறார்கள். மேற்கண்ட இரண்டுமே அறியாமையின் வெளிப்பாடு. அந்தக் கடவுள் வேறுயாருமில்லை, அது மனிதன் தான் என்றும், அவனை ஈஸ்வரன் என்றும் பிரம்மம் என்றும் ஸத் பொருள் என்றும் பரம்பொருளென்றும், மெய்ப்பொருளென்றும், செம்பொருளென்றும் உண்மையறிந்த ஞானிகளால் கூறப்பட்டுள்ளது. இதனை வள்ளற்பெருமான் அருட்பெருஞ்ஜோதி அகவலில் தெளிவுபட விளக்கியுள்ளார். உதாரணம் "மேயினை மெய்ப்பொருள் விளங்கினை நீ அது ஆயினை என்றருள் அருட்பெருஞ்ஜோதி" இதில் மனிதனே அருட்பெருஞ்ஜோதியென்று கூறுகிறார். உபநிஷதங்கள் "தத்துவமஸி" என்றும் (நீ பிரம்மமே) "அஹம் பிரமாஸ்மி" (நான் பிரம்மமே) என்றும் பயமின்றிக் கூறி பறைசாற்றுகின்றன.

Koviloor Digital Library

தனிக்குறிப்பு

சமயவாதிகள், இல்லாத கற்பனையான சாத்தான்களையும், பேய் பிசாசுகளையும் இருப்பதாகக் கூறி மக்களை மதிமயக்கி, அவர்களது சமய வலையில் சிக்கவைத்து, பயமுறுத்தி மக்களின் செல்வத்தைச் சூதாக அபகரித்து வாழ்கின்றனர்.

வள்ளற்பெருமான் இராமலிங்க சுவாமிகளின் தலையாய விருப்பம் யாதெனில்,

சன்மார்க்கிகள் ஒவ்வொரு ஊரிலும் சமசர சுத்த சத்திய சன்மார்க்க சங்கம் அமைக்க வேண்டும். சத்திய ஞானசபை அமைக்க வேண்டும். மக்களுக்கு சன்மார்க்க தத்துவத்தை போதிக்க வேண்டும் என்பதும் ஆகும்.

இதுவே சத்தியம் ! சத்தியம் ! சத்தியம் !.
நாம் அவரது விருப்பத்தை நிறைவேற்ற முயற்சிப்போமாக.

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

30.01.2010
மதுரை

மு. இராமன், S.F.R.C
தலைவர்
சமசர சுத்த சத்திய சன்மார்க்க
ஆராய்ச்சி மையம்
மதுரை

Koviloor Digital Library

பேருபதேசத்தில் வள்ளற்பெருமான் சத்விசாரம் என்பது பற்றிப் பகர்ந்துள்ளார்கள். இந்தப் பேருபதேசத்தை பெரும்பாலான சன்மார்க்கிகள் படித்து அறிந்து அனுஷ்டிக்கிறார்கள் என்பதைத் திண்ணமாகக் கூறஇயலவில்லை. ஆகவே சன்மார்க்கிகள் பேருபதேசத்தைப் படித்து அனுஷ்டிப்பது அவரவர் விருப்பத்திற்கே விட்டுவிடப்படுகிறது. சத்விசாரம் என்று குறிப்பிடுவது அருட்பெருஞ்ஜோதியைப் பற்றிய முழுமையான இலட்சணங்களை அறிந்து அனுஷ்டிக்க வேண்டுமென்பதேயாகும். பேருபதேசத்தில் கண்ட சில பகுதிகளை வள்ளலார் உபதேசித்தப்படியே மாற்றமின்றி அப்படியே கீழே தரப்பட்டுள்ளது.

பேருபதேசம்

(ஸ்ரீமுக வருஷம் ஐப்பசி மாதம் எ2 (22.10.1873) புதவாரம் பகல் அ மணிக்கு மேட்டுக்குப்பம் என்னும் சித்திவளாகத் திருமாளிகையில் முதல் கொடிகட்டினவுடனே நடந்த விவகாரத்தின் குறிப்பு)

இங்குள்ள நீங்கள் எல்லவரும் இதுவரைக்கும் இருந்தது போல் வீண்காலம் கழித்துக் கொண்டு இராதீர்கள்... நல்ல விசாரணையில் இருந்து கொண்டிருங்கள். அந்த விசாரணை எதுவென்றால் ... அவ்விசாரம் பரம் அபரம் என்று இரண்டு வகையாக இருக்கின்றது. இவற்றில் பரம் பரலோக விசாரம், அபரம் இகலோக விசாரம். இவ்விரண்டில் இகலோக விசாரம் விசாரமல்ல, சாதாரணமாக ஒருவன் விசாரம் செய்து கொண்டிருக்கிறானே என்றால் அவ்விசாரம் விசாரமாகாது. உண்மை விசாரமுமல்ல, ஏனெனில் விசாரம் என்கின்றதக்குப் பொருள் 'வி' சாரம் என்பதில் 'வி' சாதாரண உலக விசாரத்தை மறுக்க வந்தது ..... அதுமேலும் பரலோக விசாரத்தைக் குறிக்கும் பொருட்டு வந்தது..... ஒருசாம நேரம் மனதில் இகவிசாரமின்றி பரவிசாரிப்புடன் ஆன்ம நெகிழ்ச்சியோடு தெய்வத்தைச் சிந்தித்துக் கொண்டாவது அல்லது ஸ்தோத்திரம் செய்து கொண்டாவது இருந்தால் நாம் பெறவேண்டியதைப் பெற்றுக் கொள்ளலாம். ஆதலால் இவ்வுலகத்தில் விசாரமென்கின்ற உண்மை தெரியாது. விசாரமென்று வழங்கி அதைத் துக்கமென்றே சொல்வார்கள். நாம் அப்படி அர்த்தம்

பண்ணக் கூடாது. அவர் பண்ணுகின்ற துக்கமே விசாரமென்கின்றது. அது தப்பு அவ்வர்த்தமும் அன்று. சாரமென்கின்றது துக்கம். விசார்மென்கிறது துக்கநிவர்த்தி, 'வி' உபசர்க்கம். சாரமென்கின்ற துக்கத்தை நிவர்த்தித்தது. ஆதலால் இடைவிடாது விசார வசத்தவராயிருக்க வேண்டியது. மேலும் விசாரமென்பது விபத்து. சாரம்–நீக்குதல் நடத்தல். ஆதலால் இடைவிடாது நன்முயற்சியின்கண் பயிலுதல் வேண்டும். இதனை திருவருட்பெருஞ்ஜோதி அகவலில் கண்டுணர்க.

(இதனையே பரஞானம்: அபரஞானம் பராவித்தை அபராவித்தை: நித்திய அநித்தியவஸ்து விவேகம்: பிரம்மவித்தை பிரபஞ்ச வித்தை முதலியவார்த்தைகளால் நமது சாஸ்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது)

அதற்கு மேற்பட நாமும் முன்பார்த்தும் கேட்டும் இலட்சியம் வைத்துக் கொண்டிருந்த வேதம் ஆகமம் புராணம் இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் இலட்சியம் வைக்க வேண்டாம். ஏனென்றால், அவைகளில் ஒன்றிலாவது குழூஉக்குறியின்றி தெய்வத்தை (அருட்பெருஞ்ஜோதி) இன்னபடி என்றும் தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும் கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல் மண்ணைப் போட்டு மூடிவிட்டார்கள்... ஆதியிலே இதை மறைத்தவன் ஒரு வல்லவன் (வேதவியாசர்) அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை. (இந்தப் பூட்டை உடைக்கவே வள்ளற் பெருமான் அவதரித்தார். அதன்படி உடைத்து சன்மார்க்கத்தை நிறுவினார்.)

இதுபோல் சைவம் வைணவங்களிலும் வேதாந்தம் சித்தாந்தம் முதலிய மதங்களிலும் இலட்சியம் வைக்க வேண்டாம் ... (மதங்களால்) இயற்கையுண்மை என்னும் ஆன்ம அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளுவதற்கு முடியாது. ஏனெனில் நமக்குக் காலமில்லை. இவைகளுக்கு எல்லாம் சாட்சி நானே இருக்கிறேன். (வள்ளற்பெருமான் தமது 42வது வயதுவரை சைவ மதக் கோட்பாடுகளில் ஈடுபாடு கொண்டு பின்பு இதனை நிராகரித்து சன்மார்க்கம் ஸ்தாபித்தார்கள்). நான் சைவ சமயத்தில் இலட்சியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவு என்று அளவு சொல்லமுடியாது... அந்த இலட்சியம் இப்போது (சன்மார்க்கம்

Koviloor Digital Library

ஸ்தாபித்த பின்பு) எப்படிப் போய்விட்டது என்று பார்த்தீர்களா? அப்படி இலட்சியம் வைத்ததற்குச் சாட்சி வேறு வேண்டியதில்லை. நான் சொல்லியிருக்கிற (திருவருட்பாவில் 1 முதல் 5 திருமுறைகள் அடங்கியிருக்கிற) ஸ்தோத்திரங்களே போதும். அந்த ஸ்தோத்திரங்களையும் மற்றவர்களது ஸ்தோத்திரங்களையும் (சைவ சித்தாந்தத்தின் 1 முதல் 12 திருமுறைகளையும்) சபைக்குக் கொண்டு வந்தால் அவைகளே சாட்சி சொல்லிவிடும். ஏன் அவ்வளவு அழுத்தம் இருந்ததென்றால் அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது.

வள்ளற்பெருமான் இயற்றிய சமயம் சார்ந்த 1 முதல் 5 திருமுறைகளடங்கிய அருட்பாவை அவரே நிராகரித்தார். கண்மூடிப்பழக்கமெல்லாம் மண்மூடிப்போக வேண்டுமென சபித்தார். மேலும் சமயச் சின்னங்கள் அணிவதையும் நிராகரித்தார். ஆனால் இன்று வடலூரர் பெருவெளியில் தைப்பூச காலத்திலும் பல சன்மார்க்கக் கூட்டங்களிலும், இந்த சமயம் சார்ந்த அருட்பா முற்றோதல் எனும் தலைப்பில் வள்ளல் பெருமானால் நிராகரிக்கப்பட்ட முதல் 5 திருமுறைகளையும் சேர்த்தே பாடுகிறார்கள். இதனால் அவர்கள் பெருமான் புகட்டிய சமரச சுத்த சன்மார்க்கத்தை சிதைக்கிறார்கள். இது வள்ளற் பெருமான் விருப்பத்திற்கு மாறான செயலாகும். சுத்த சன்மார்க்கமும் இல்லாது போகிறது.

இப்போது என்னை ஏற்றாத நிலையில் ஏற்றியிருக்கிறார். இப்போது எல்லாவற்றையும் (மதம் சம்பந்தப்பட்ட அனைத்தையும்) விட்டுவிட்டதனால் வந்த இலாபம் இது. ஆதலால் நீங்களும் விட்டுவிட்டீர்களானால் (1 முதல் 5 திருமுறைகளையும் மதம் சம்பந்தப்பட்டவைகளையும் விட்டுவிட்டால்) என்னைப் போல் பெரிய இலாபத்தைப் பெறுவீர்கள்.

சாதியும் மதமும் சமயமும் காணா
ஆதியனாதியாம் அருட்பெருஞ்ஜோதி

சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி

பொய்ந்நெறி அனைத்திலும் புகுத்தாதுஎனை
செந்நெறி செலுத்திய சிற்சபை சிவமே

எனக்கூறப்பட்ட அருட்பெருஞ்ஜோதி அகவல்

Koviloor Digital Library

சிந்தனைக்குரியது. மேலும் அவர் (அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர்) தெரிவித்த பெருநெறி ஒழுக்கம் யாதெனில் 'கருணையும் சிவமே பொருளெனக் காணும் காட்சியும் பெறுக' என்றதுதான். என்னை ஏறாநிலை மிசை ஏற்றுவித்தது யாதெனில் (அருட்பெருஞ்ஜோதி) தயவு 'தயவு' எனும் கருணைதான் என்னைத் தூக்கிவிட்டது.

அந்தத் தயவிற்கு ஒருமை வரவேண்டும் (அருட்பெருஞ்ஜோதியும் தானும் ஒன்றென அறிவது) அந்த ஒருமை இருந்தால்தான் தயவுவரும். இப்பொழுது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கும் கடந்திருக்கிறது. நான் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை வைத்திருக்கிறேன். அண்டபிண்ட சொரூப ரூப சுபாவம் என்னவென்று அறிய வேண்டும். இரண்டரை வருடங்களாக நான் சொல்லிக் கொண்டு வந்தேன். இனிச் சொல்லுபவர்கள் சில நாள் தடைப்பட்டிருப்பார்கள்... இது கடைசி வார்த்தை. சிவாய நமவென்றும் நமசிவாய என்றும் இது போன்ற வர்ணங்களைச் சேர்த்து ஒன்று இரண்டு மூன்று ஐந்து ஆறு எட்டு பத்து பதின்மூன்று பதினாறு இருபத்தினான்கு என்னும் சங்கையில் வைத்து மந்திரங்களாய் அடைத்து வருவிக்க விட்டு நடந்து வருகிறது. அம்மந்திரங்களின் அர்த்தம் பலவாக விரியும். ஆதலால் நாம் அடையவேண்டுவது முடிவான ஆன்ம இலாபமாகிய சிவானுபவமே. (அது நீ என்னும் தத்துவமாகிய காணும் அனைத்து ஜீவன்களும் அருட்பெருஞ்ஜோதியென்று அறிந்து அதுவாக இருத்தல்).

மேயினை மெய்ப்பொருள் விளங்கினை நீயது
ஆயினைஎன்றருள் அருட் பெருஞ்ஜோதி

அன்றிவேறில்லை. மகாமந்திர வாக்கியத்தை எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம் எனது மெய்யறிவின்கண் அனுபவத்தெழுந்த உண்மை அறிவானுபவானந்தத்தை நீங்கள் எல்லவரும் என்போல் ஐயம் திரிபுமயக்கமின்றியடைய என்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைப் பற்றி குறிப்பித்தேன், குறிப்பிக்கிறேன், குறிப்பிப்பேன் நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில் நமக்குமுன் சாதனம் கருணையானதினாலே ஆண்டவர் முதற்சாதனமாக

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

எனும் திருமந்திரத்தை எடுத்துக் கொண்டார். தயவு, கருணை, அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். 'சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றின் அதுதான் வந்துமுந்தும்' எனும் பிரம்மாணத்தில் உணர்க (அது நீ எனும் மகாவாக்கியத்தில் கண்ட உயிர்களும் அருட்பெருஞ்ஜோதியும் ஒன்று எனும் தத்துவம். இதனையே ஒருமை என்று வள்ளற் பெருமான் குறிப்பிடுகிறார். இதனை விசாரம் செய்வது நமது கடமை)

(சிலர் வள்ளற்பெருமான் கூறியுள்ள தயவு என்ற வார்த்தையை மூன்று எழுத்துக்களாகப் பிரித்து ஒவ்வொரு எழுத்துகளும் அர்த்தத்தை கற்பிதம் செய்து கொண்டு பொருள் கூறுகிறார்கள். வார்த்தைகளை சங்கைகளாகப் பிரித்துப் பொருள் கூறுவது பிழை என்று வள்ளல் பெருமான் பேருபதேசத்தில் கூறியுள்ளார் மேலும் பெருமான் அவர்கள் பரோபகாரத்தையும் சத்விசாரத்தையும் பின்பற்றுமாறு வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். இங்கு பரோபகாரமாகிய தயவு மட்டும் பேசி சத்விசாரத்தை மறைக்க முயற்சிக்கிறார்கள். சத்விசாரமென்பது அருட்பெருஞ்ஜோதி விசாரமேயாகும். ஜீவர்களிடத்தில் காட்டும் கருணையே தயவு. அருட்பெருஞ்ஜோதி என்று சொல்ல வேண்டிய இடத்தில் 'தயவு' என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். அருட்பெருஞ்ஜோதியின் பொருள் அருள் + பெரிய + ஜோதி ஆகும். அதாவது ஜோதி என்ற ஈஸ்வரம் கருணையுடனும் அகண்டமாகவும் விளங்கும் பெரும்பதியாகிய பிரம்மத்தைக் குறிக்கும். இதனை விசாரம் செய்து பேரறிவால் அறிய வேண்டும். தயவு என்ற சொல் அருட்பெருஞ்ஜோதி என்ற மகாமந்திரத்தின் பொருளை முழுமையாக வெளிப்படுத்தாது; மாறாகக் குறைவுபடுத்தும். ஆகவே அருட்பெருஞ்ஜோதி என்று கூறவேண்டிய இடத்தில் 'தயவு' என்ற சொல்லைப் பயன்படுத்துவது சன்மார்க்கமாகாது. மகாமந்திரமாகிய அருட்பெருஞ்ஜோதியை மண்ணைப் போட்டு மூடிவிடப் பார்க்கிறார்கள். இது சன்மார்க்கத்திற்கு முரணானது. சன்மார்க்கத்தைக் குழிதோண்டிப் புதைக்க முயற்சிப்பதாகும். சன்மார்க்கிகளே விழித்துக் கொள்ளுங்கள். 'பசித்திரு தனித்திரு விழித்திரு' எனும் நம் பெருமானவர்களின் ஆப்தர் வாக்கியத்தை நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துக் கடைபிடிக்க வேண்டுவது நமது கடமையாகும்).

Koviloor Digital Library

தற்போது சன்மார்க்கமில்லை. சன்மார்க்கம் இருந்திருந்தால் அனுபவித்தறியாத அனுபவத்தையும் கேட்டறியாத கேள்வியையும் நாம் கேட்டிருப்போம் (உயிர்களும் அருட்பெருஞ்ஜோதியும் ஒன்று என்பது) அதனைக் கேட்டிருக்கும் காலேமே சன்மார்க்க காலம். இப்படி இருந்து கொண்டிருந்தால் எல்லா நன்மையும் பெற்றுக் கொள்வீர்கள். நாம் அடையவேண்டுவது ஆன்மனுபவம் எனும் சிவானுபவமேயன்றி வேறில்லை. (இதனையே ஒருமைப்பாடு என்றும் அத்துவிதம் என்றும் வள்ளற் பெருமான் குறிப்பிடுகிறார்)

சுத்தமெய்ஞ்ஞான சுகோதய வெளியெனும்
அத்துவிதச் சபையருட்பெருஞ்ஜோதி

எனும் அருட்பெருஞ்ஜோதி அகவல் சிந்தனைக்குரியது.



1. பரம்பொருள்
2. பிரணவம்
3. தமஸ்-ரஜஸ்-சத்துவம்
4. மாயா (பிரகிருதி)
5. மகத்
6. பிராணன்
7. ஆகாயம்
8. ஒளிஉஷ்ணம்
9. வாயு
10. திரவம்
11. திடப்பொருள்

Koviloor Digital Library

2 முதல் 11 வரை தோன்றிய நிலையே ஜகம், ஜடப்பொருள், தாவரம், ஜீவராசிகள், மனிதன் முதலியன - (இகநிலைப் பொருளாய் பரநிலைப் பொருளாய் அகமறப் பொருந்திய அருட்பெருஞ்ஜோதி வள்ளலாரின் அகவல்)

(அயாத்ம பிரம்ம அனைத்தும் பரம்பொருள் - பிருஹதாரணிய கோபநிஸத் 2.5.19)

(தத்துவமசி ⟶ அது நீ ⟶ உனக்கு அன்னியமாக ஒன்றும் இல்லை. சாந்தோக்கியோபநிஸத் 6.9.4)

மேற்கண்டவைகளுக்கு அனுபவபூர்வமான பிரமாண்யம் - மாண்டுக்ய உபநிஸத், இவ்வாறாக பரம்பொருள் விளங்குகிறது.

1. ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை அல்லது ஆன்மீகம் என்றால் என்ன?

வள்ளற்பெருமான் தமது கடைசி உபதேசமாகிய பேருபதேசத்தில் கூறியதாகவது :

“உண்மை சொல்ல வந்தனனே என்று உண்மை சொல்லப்புகுந்தாலும் தெரிந்து கொள்வாரில்லை” கொடிகட்டிக் கொண்டபடியால் இனி எல்லோரும் உண்மையை அறிந்து கொள்வார்கள். முன் உள்ளவர்கள் உண்மையினைத் தெரிய வொட்டாது மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள்.

வள்ளற்பெருமான் ஏன் மேற்கண்டவாறு கூறினார் என்பது பற்றி சத்விசாரம் செய்வோமாக.

1. ‘உண்மை சொல்ல வந்தனனே’ என்று கூறுவது எந்த உண்மையைக் கூறுகிறது?

2. ‘உண்ம்ம சொல்லப் புகினும் அறிந்து கொள்வாரில்லை என்று ஏன் கூறினார்கள்?

வள்ளற் பெருமான் கூறவந்த ‘உண்மை’ ‘ஆத்ம ஞானம் எனும் சத்மார்க்கமே’ அதனை ஒருமை என்றும் அத்வைதம் என்றும் கூறும் தத்துவமாகும். இதனையே வள்ளற்பெருமான் ‘ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை’ என்று கூறுகிறார்.

ஆத்மா, ஆத்மீகம் என்பவைகள் சமஸ்கிருதச் சொற்களாகும். இதனைத் திரிபுபடுத்தி ஆன்மா, ஆன்மீகம் என்று தமிழில் கூறப்படுகிறது. மாண்டூக்ய உபநிஷத்தின் மகாவாக்கியமாகிய 'அயாத்ம பிரம்ம' அதாவது ஆத்மா பிரம்மமே, பிரம்மத்தை ஸத் பொருள், மெய்ப்பொருள், பரம்பொருள், செம்பொருள், ஜோதி எனப் பலவார்த்தைகளில் அழைக்கப்படுகிறது. ஆத்மா என்பதன் பொருள் :- 'ஆ' என்பது இல்லாதது 'த்' என்பது ஜடம் 'மா' என்பது பெரும் பொருள் அதாவது ஜடத்தன்மை இல்லாத பெரும் பொருள் அதாவது 'சொரூபம்' என்பதாகும். இதனை 'ஆத்மா' என்றும் 'ஆன்மா' என்றும் ஞானிகள் கூறுகின்றனர். ஆகவே ஆன்மா என்பது ஸத்தாகும். அந்த ஸத்தை அறிந்து அனுபவிக்கும் உபாயத்தை ஸத்+மார்க்கம் = சத்மார்க்கம், சன்மார்க்கம் என்று அழைக்கப்படுகிறது. ஆகவே சன்மார்க்கம் ஒன்றே ஆன்மீகமாகும் மற்ற சமய மார்க்கங்கள் ஒரு போதும் ஆன்மீகமாகாது. உலகிலுள்ள அனைத்துச் சமயங்களும் ஆன்ம ஞானத்தை அறியாதவைகளே. அவைகள் திரிபுபடுத்தி அஞ்ஞானத்தையே போதிக்கின்றன. ஆகவே வள்ளற் பெருமான் 'சாதியும் மதமும் சமயமும் பொய்யென'க்கூறினார். சமயங்களைப் பற்றிப் போதிக்கிற வேதம் ஆகமம் இதிகாச புராணங்களை ஜாலவித்தை எனக்கூறி அவைகளை விட்டுவிடும்படி பேருபதேசத்தில் அருளிச் செய்தார்கள்.

'தோன்றிய வேதாகமம் ஜாலமென உரைத்தேம் சொற்பொருளும் இலக்கியமும் பொய்யெனக் கருதேல்' என திருவருட்பாவில் அருளிச் செய்தார்கள். இனி ஆன்மீகத்தைச் சத்விசாரம் செய்வோமாக. ஸத்தாகிய ஆன்மாவை ஓர் உவமையின் மூலம் அறியலாம். எரியும் தீப்பந்தத்தை நீண்ட கம்பியில் கட்டி வேகமாக சுழற்றினால் ஒரு வட்ட வடிவத் தீப்பிழம்பு இடையற்றுத் தோன்றும். அத்தீப்பிழம்பு உண்மையில் அந்தத் தீப்பந்தத்தில் மட்டும் நிலை கொண்டுள்ளது. அது முழுவட்டத்தில் பரவியிருப்பது போல் ஒரு காட்சியைத் தருகிறது. அந்தத் தீப்பந்தம் உண்மையில் வட்டவடிவமில்லை. சுழற்சியின் வேகத்தில் வட்ட வடிவமாகக் காட்சியளிக்கிறது. அது போல ஸத்தாகிய ஆன்மா பிரபஞ்ச சிருஷ்டியாகத் தோன்றும் பொழுது இப்பிரபஞ்சம் உண்மைபோல் காட்சியளிக்கிறது. அதனை வள்ளற் பெருமான் ஸத்பொருளெனப்

Koviloor Digital Library

பகர்கிறார். அருட்பெருஞ்ஜோதி அகவலில் 'இகநிலைப் பொருளாய் பரநிலைப் பொருளாய் அகமறப் பொருந்திய அருட்பெருஞ்ஜோதி' என்றும் 'தானொரு தானாய் தானே தானாய் ஊனுயிர் விளங்கும் ஒரு தனிப்பொருளே' என்றும் பகர்கிறார். ஸத்பொருளாகிய அருட்பெருஞ்ஜோதியே இப்பிரபஞ்சமாகவும் ஊனுயிராகவும் காட்சியளிக்கிறது. இந்தப் பிரபஞ்சம் ஊனுயிர்க் காட்சி. சுழலும் தீப்பந்தத்தால் ஏற்படும் வட்ட வடிவத் தீப்பிழம்புபோல் நிலையில்லாதது. அநித்தியமானது அதுவெறும் காட்சி மட்டும் தான். இந்தக் காட்சிகள் அவைகள் தோன்றுவதற்கு முன்பும் மறைந்ததற்குப் பின்பும் இல்லாது போகிறது. இந்த ஊனுயிர் காட்சித் தோற்றத்திற்கு முன்புமில்லை மறைவிற்குப் பின்புமில்லை. எதுவொன்று முன்புமில்லையோ, பின்புமில்லையோ இடையில் தோன்றினாலும் அஃது இல்லாததே என்று கூறுவது தத்துவமாகும்.

சத்தியம் : இதன் விளக்கமாகவது, சத்தியம் என்பது என்ன? ச+த்+யம் இது பற்றிய விளக்கம் பிருகு தாரண்யஹோபநிசத்தில் 5-5-1லும், சாந்தோக்கிய உபநிஷத்தில் 8-3-5லும் பகரப்படுகிறது. 'ச' என்பது பரம் பொருளாகும் 'த்' என்பது தோன்றிய இப்பிரபஞ்சமாகும். பஞ்சபூதங்கள், சூரிய, சந்திர, நட்சத்திரங்கள் மற்றுமுள்ள கிரகங்கள் அதில் காணப்படும் தாவரங்கள், ஜீவராசிகள் மற்றும் மானிடர் முதலியன. இந்த 'ச' என்ற பரம்பொருளும் 'த்' என்ற பிரபஞ்சமும் வெவ்வேறு அல்ல. அவை அபின்னமென்றும், ஏகமென்றும். அத்வைதமென்றும், ஒருமை என்றும் பொருள்படப் பேசப்படுகிறது. சம்ஸ்கிருத இலக்கணப்படி ச+த் இரண்டையும் இணைத்ததில் ஏற்பட்ட ஈற்று இயம் என்ற உச்சரிப்பு ஏற்படுகிறது. இதனையே 'சத்தியம்' என்று கூறுகின்றனர். இதன் பொருள் சத்பொருளும் பிரபஞ்சமும் மற்றுமுள்ள அனைத்தும் வேறு வேறானவை அல்ல. சத்தே பிரபஞ்சமாகத் தோன்றிக் காட்சியளிக்கிறது. இந்தத் தத்துவ விளக்கத்தையே 'அருட்பெருஞ்ஜோதி அகவலாக' வள்ளற்பெருமான் இயற்றியருளினார். சங்கரரும் 'மானுஷ்ய பஞ்சகத்தில் பிரம்மம் பிர பஞ்சமாகக் காட்சியளிக்கிறது' எனக் கூறியுள்ளார்கள். இஃது அபின்னம் அதாவது இரண்டாக விரியாத ஒருமையே, மேலும் இது சத்தியம் என்று அழைக்கப்படுகிறது. சத்தியம் என்ற சொல்லை உலகமக்கள் உண்மையென்றும் வாய்மை என்றும்

திரிபுபடுத்திக் கூறுகிறார்கள். இஃது இவர்களின் எண்ணத்தில் தோன்றிய கருத்து. ஆனால் ஸத்தியம் என்பது பிரத்தியட்சம். ஆகவே சத்தியமென்றால் அதன் பொருள் வாய்மை என்று கூறுவது பிழை. எது பிரத்தியட்சமோ - மாறாததோ - நித்தியமோ - காலதேச வர்த்தமானம் கடந்ததோ - சொரூப ரூபமாகவுள்ளதோ அது சத்தியம். அதுவே இதன் தத்துவமாகும். இதனையே வள்ளற்பெருமான் 'சத்மார்க்கம்' என அழைக்கிறார்.

ஆனால் சமயவாதிகள் சமயங்களைப் படைத்து, அதனை சித்தாந்தம் என்று கூறுகிறார்கள். அதில் ஒன்றே சைவசித்தாந்தம். சித்தாந்தம் என்பதன் பொருள், இந்தப் பிரபஞ்ச செல்வத்தைப் பற்றிப் பேசுவதாகும். ஆகவே சித்தாந்திகளுக்கு பிரபஞ்ச ஞானமாகிய அபரஞானம் மட்டுமே தெரியும். இதனையே அபராவித்தை என்றும் அநித்தியமென்றும் கீழானவை என்றும் பரஞானத்தில் பேசப்படுகிறது. சித்தாந்திகள் பரஞானத்தையறியாதவர்கள். ஆகவே அவர்களை வள்ளுவர்

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்ல றிவாண்மை கடை - எனக் கூறுகிறார்.

அதாவது கடைகெட்ட அறிவுள்ளவர் என்பதாகும். சமய சித்தாந்தங்கள் சித்த விருத்தியைப் பற்றிப் பேசுகிறது. சன்மார்க்கம் என்பது சித்த விருத்தி நிரோதகா ஆகும். அதன் பொருள் மனதில் ஏற்படும் விகாரங்கள் அற்ற நிலையாகும். சமயங்கள் சித்த விருத்தியாகும். அதாவது மனதில் தோன்றிய எண்ணங்களாகும். 'ஏகம் சத் விப்ர பஹுதா வதந்தி' என்பது வேதாந்தச் சொல் அதன் பொருள் ஸத் பொருள் - ஏகமானது. அதனை சமயவாதிகள் பதி பசு பாசமென்று மூன்றாகவும் மகாவிஷ்ணு சங்கர்சனன் பிரத்யுமன் அனுருதா என நான்காவும் பேசுகிறார்கள்.

''ஓம் தத் ஸத்' என்பது அந்த ஸத் பொருளே பிரணவமாகவும் பிரபஞ்சமாகவும் காட்சியளிக்கிறது. மேற்கண்ட தத்துவ உண்மைகளைக் கொண்ட ஞானத்தைப் போதிக்கவே வள்ளற்பெருமான் அதனை 'சத்மார்க்க'மென்று அழைத்தார்கள் சன்மார்க்கமென்பது பிரத்தியட்சம்

Koviloor Digital Library

எதுவோ அதனையே குறிக்கும். இதுதான் தத்துவம், இத்தத்துவ விளக்கந்தான், அருட்பெருஞ்ஜோதி அகவல்'.

இப்பிரபஞ்சம் முன்புமில்லை பின்புமில்லை. இந்தத் தோற்றமிருக்கும் வரை மட்டும் உண்மை போல் காட்சியளிக்கிறது. இது மாறும் உண்மையாகும். எதுவொன்று முன்பும் தற்போதும் பின்பும் நிலையாக நித்தியமாக உள்ளதோ அது மாறாத உண்மையாகும். இந்த மாறாத உண்மையை ஸத் பொருள்-மெய்ப்பொருள்-ஆன்மா-அபின்னம்-ஜோதி-பரஞ்ஜோதி-சொரூபம் என்று சான்றோர் பகர்வர். இதனை வள்ளற் பெருமான் அருட்பெருஞ்ஜோதி என்று அழைக்கிறார். இந்தச் சத்தியத்தையறிவதே ஆன்மீகமாகும் அல்லது சன்மார்க்கமாகும்

ஸத் பொருள் அல்லது ஆன்ம இலட்சணம் :

ஆன்ம இலட்சணம் என்பது நித்தியம், நிர்மலம், ஞான சொரூபம், ஏகம் மற்றும் அபின்னமாகும். இந்த இலட்சணங்களை வள்ளற்பெருமான் அருட்பெருஞ்ஜோதி அகவலில் பல்வேறு உவமைகளில் விளக்குகிறார். இதனினும் எளிதாக வேறொருவராலும் விளக்கவியலாது.

1. எதையடைந்தபின் வேறொன்றையடைய வேண்டியதில்லையோ, எந்த ஆனந்தம் அனுபவிக்கப்பட்டபின் வேறு ஆனந்தம் அனுபவிப்பதற்கில்லையோ, எதையறிந்த பின் வேறொன்றை யறிவதற்கில்லையோ அதை ஆன்மா என்றும் சத்பொருளென்றும் அருட்பெருஞ்ஜோதியென்றும் அறிந்து அனுபவிப்பாயாக.

2. சத்-சித்-ஆனந்தமாகவும் இரண்டற்றதாகவும், அகண்டமாகவும், நித்தியமாக இருப்பதும் எங்கும் நீக்கமற வியாபித்து மாக நிற்பதும் எதுவுளதோ அஃது ஆன்மா. சத் பொருள் அருட்பெருஞ்ஜோதியென்று அறிந்து அனுபவிப்பாயாக.

3. எது ஆன்மாவோ அதுவே நிகரற்றதும் அளவு கடந்ததும் சத்பொருளுமான அருட்பெருஞ்ஜோதியென்று அறிய வேண்டும். அஃது அகண்டமாகவும் அருளாகவும் இருப்பதால் அருட்பெருஞ்ஜோதியென்று அழைக்கப்படுகிறது.

4. நீ அருட்பெருந்ஜோதி நான் அருட்பெஞ்ஜோதி அல்ல என்று கூறுவது அறியாமை இந்த அறியாமையே எல்லாத் துன்பங்களுக்கும் ஆணிவேராகவுள்ளது.

5. அனைத்தும் அருட்பெருஞ்ஜோதியென்று கூறுவதே ஆன்மீகமாகும் - சன்மார்க்கமாகும்.

6. பிரபஞ்சம் முழுவதும் அதன் அனைத்துச் செயல்களும் அருட்பெருஞ்ஜோதிக்கு அந்நியமில்லை. ஆகவே அஃது அபின்னமாகும் - அத்வைதமாகும் - ஒருமையாகும்.

7. விண்எங்கும் வியாபித்திருப்பது போல் ஆன்மாவாகிய அருட்பெருஞ்ஜோதி எங்கும் வியாபித்திருக்கிறது.

8. சூரிய சந்திர நட்சத்திரங்கள் ஆன்மாவாகிய அருட்பெருஞ்ஜோதியால் பிரகாசிக்கின்றன. ஆனால் அவைகளின் பிரகாசத்தால் அருட்பெருஞ்ஜோதி பிரகாசிப்பது இல்லை. அருட்பெருஞ்ஜோதி சுயம் ஜோதி என அறிந்து அனுபவிப்பாயாக.

9. பார்ப்பதெல்லாம் கேட்பதெல்லாம் அருட்பெருஞ்ஜோதியே, அதைத்தவிர வேறொன்றுமில்லை. இந்த உண்மையை அறிந்தவன் அருட்பெருஞ்ஜோதிக்கு அந்நியமாக வேறொன்றுமில்லை என்று அறிகிறான். - அவனே சன்மார்க்கி

10. அண்ட சராசரம் முழுவதும் அருட்பெருஞ்ஜோதியென்று அறிந்து கொண்ட சன்மார்க்கிக்கு தியானிப்பதற்கோ தியானிக்காமலிருப்பதற்கோ பேசுவதற்கோ பேசாமலிருப்பதற்கோ செயல் செய்வதற்கோ செயல்படாமலிருப்பதற்கோ என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை.

ஆன்மா பற்றி சுவாமி விவேகானந்தர் கூறுவதாவது

ஆன்மா பிறப்பதுமில்லை. இறப்பதுமில்லை சுவர்க்கத்திற்குச் செல்வதுமில்லை. ஆன்மாவைப் பொறுத்தவரையில் மீண்டும் பிறப்பது என்பது பொய். மறுபிறவி என்பதும் பொய். ஆன்மா எங்கும் நிறைந்தது. எனவே அஃது எங்கே போவது? எங்கே வருவது? அப்படி ஒன்றுமில்லை. தோற்றமாயையாகிய உடலில் பிறப்பு இறப்பு எல்லாம் இயற்கையின் நியதி. இந்த உண்மையே அண்ட பிண்ட இரகசியம் எனப் பேசப்படுகிறது. இத்னை சன்மார்க்கிகள் எளிதில் அறிவார்கள் சமயவாதிகளால் அறிய முடியாது.

Koviloor Digital Library

ஒரு சமயம் பகவான் ஆதி சங்கரர் கங்கையில் குளித்துவிட்டு கரையேறி வரும்போது சண்டாளன் ஒருவன் நாய்களுடன் எதிர்ப்பட்டான். பகவான் சங்கரர் வர்ணீய பேதத்தில் மூழ்கி அஞ்ஞானத்திலிருந்ததால் சண்டாளனை நோக்கி 'துாரப்போ துாரப்போ' என உச்சரிக்கிறார்.

இது தீண்டாமைக் கொடுமை மட்டுமல்ல, அஞ்ஞானமாகும். அதற்கு அந்தச் சண்டாளன் என் உடலைத் துாரப் போகச் சொல்லுகிறீர்களா அல்லது ஆன்மாவைத் துாரப் போகச் சொல்லுகிறீர்களா? என வினவினான். இதனைக் கேட்ட பகவான் ஆதி சங்கரற்கு ஞானம் உதித்தது. உபநிஷத்து மகாவாக்கியங்களாகிய 'அயாத்ம பிரம்ம' (ஆத்மா பிரம்மமே) 'தத்துவமஸி' (அது நீ) என்ற மாண்டூக்கிய உபநிஷத்தின் கருத்தையும் சாந்தோக்கிய உபநிஷத்தின் கருத்தினையும் பரமஹம்சோ பநிஷதம் புகட்டும் பூநூால் அணிவதும் ஜடா முடி தரிப்பதும், மொட்டையடிப்பதும், வேதம் ஓதுவதும் அஞ்ஞானத்தின் விளைவே. இவைகளை விட்டுவிடுவதே ஞானம் என்று கூறுவதையறிந்து சடங்காச் சாரங்களையும் விட்டொழித்தார்.

சண்டாளின் உடலும் உடன்வந்த நாய்களும் ஆன்மாவென அறிந்தார். வர்ணீயபேதம் பேசுவது தீண்டாமையைக் கடைபிடிப்பது அஞ்ஞானமென அறிந்து சண்டாளனின் கால்களில் சாஸ்டாங்கமாக விழுந்து வணங்கினார். பிரம்மம் பிரபஞ்சமாகக் காட்சியளிக்கிறது என்ற உண்மையை போதித்த சண்டாளனை அவரது சற்குருவாய் ஏற்றார். இந்நிகழ்வின் காரணமாக ஆன்ம ஞானத்தைப் போதிக்கும் 'மானுஷ்ய பஞ்சகம்' எனும் நூலை பகவான் ஆதி சங்கரர் இயற்றினார். அஃது ஆன்ம ஞானத்தை அற்புதமாகப் போதிக்கிறது. வர்ணீய பேதமும் தீண்டாமையும் ஆன்ம ஞானத்திற்கு எதிரானது எனப்போதித்தார்.

அவரது பஜகோவிந்தத்தில் சமயவாதிகளையும் சந்நிதானங்களையும் புரோகிதர்களையும் விழித்து 'ஜடாமுடி தரிப்பதும், மொட்டையடிப்பதும் காசாயம் தரிப்பதும் வயிற்றுப் பிழைப்பிற்கே வயிற்றுப் பிழைப்பிற்கே விட்டுவிடு விட்டுவிடு' எனப் போதித்தருளினார். இந்தச் செயல்களினாலெல்லாம் ஆன்ம ஞானம் அறியப்படமாட்டாது எனவும் போதித்தருளினார்.

Koviloor Digital Library

மேற்கண்ட நிகழ்வுகளில் நாம் அறிய வேண்டியது :

பகவான் சங்கரர் ஆரம்பகாலத்தில் வர்ணீயங்களையும் சமயங்களையும் உண்மையென நம்பி ஆறு சமயங்களாகிய சைவம், வைணவம், சாக்தம், காணாபத்தியம், கௌமாரம் மற்றும் சௌரம் போன்ற மதங்களை ஸ்தாபித்தார். இவைகளை நிலைகொள்ளச் செய்வதற்காக நான்கு மடங்களையும் ஸ்தாபித்தார். இவைகளை அங்கீகரிப்பதுபோல் பல நூல்களையும் இயற்றினார். பகவான் சங்கரர் கங்கைக் கரையில் சண்டாளனைச் சந்தித்த நிகழ்விற்குப் பின்பு மேற்கண்ட தன்னால் ஸ்தாபிக்கப்பட்ட சமயங்களும் சாஸ்திரங்களும் மற்ற அனைத்தும் அபராவித்தை அஞ்ஞானம் - அறியாமை என்பதை அறிந்து அவைகளைவிடுத்து பராவித்தையாகிய 'மானுஷ்ய பஞ்சகத்தை' இயற்றினார். மேற்கண்டவைகளை நோக்கும் பொழுது அவர்களது ஆரம்ப காலத்தில் ஸத்தியத்தையறியாது பல செயல்களைச் செய்தும், உண்மையில்லாத சாஸ்திரங்களை எழுதியும் உள்ளார் என்பதை நாம் அறிய முடிகிறது. சத்தியத்தையறிந்த பின்பு சமயங்களையும் சடங்காச்சாரங்களையும் இவைகளைப் போதிக்கும் சாஸ்திரங்களையும் விட்டொழித்தார் என்றும் அறிய முடிகிறது. சிலர் இவர் இயற்றிய ஆரம்பகால சாஸ்திரங்களைப் பேசி பிற்காலத்தில் ஞானமடைந்தபின்பு இவர் இயற்றிய ஞான சாஸ்திரங்களை சமய வாதிகள் எதிர்க்கிறார்கள். இஃது அறியாமையாகும். அஞ்ஞானமாகும். அபர ஞானமாகும்.

இது போன்றே நமது வள்ளற்பெருமான் அவர்களும் ஆரம்பகாலத்தில் சத்தியத்தையறியாது 1 முதல் 5 திருமுறைகளாகிய சமயம் சார்ந்த திருவருட்பாக்களை இயற்றினதாகவும், சத்தியத்தையறிந்த பின்பு அவரது பேருபதேசத்தில் தாம் சிற்றறிவாக இருக்கும் போது இவைகளைச் செய்ததாகவும், சத்திய ஞானம் அறிந்த பின்பு இவைகளை விட்டு விட்டதாகவும் கூறி சன்மார்க்கிகளாகிய நம்மையும் சமயம் சார்ந்த சாஸ்திரங்களையும் சடங்காச்சாரங்களையும் விட்டு விடுமாறும் போதித்தருளினார்கள். இதன் மூலம் நாமறிவது குழந்தைகள் சிறு வயதாயிருக்கும் பொழுது பெற்றோர் முன்னிலையிலும் தெருக்களிலும் ஆடையின்றி நிர்வாணமாக கூச்சமின்றி விளையாடுவது இயல்பு. இதே குழந்தை வளர்ந்து 60 வயதான பின்பும் பெற்றோர் முன்பும் தெருவிலும் நிர்வாணமாக விளையாடுவது இல்லை. அறிவற்ற சிலர்

Koviloor Digital Library

குழந்தையாயிருக்கும் பொழுது நிர்வாணமாக விளையாடினாய் இப்பொழுது ஏன் அவ்வாறு விளையாடுவதில்லை என உண்மையறியாது கேட்கிறார்கள். அது போல ஞானிகள் சத்தியத்தையறியாது அஞ்ஞானத்திலிருந்த காலத்தில் அவர்கள் எழுதிய சாஸ்திரங்களை நாம் ஏன் படிக்கக் கூடாது ஏன் பின்பற்றக் கூடாது என்று கேட்கிறார்கள். இஃது அவர்களின் சிற்றறிவாகும். இதனை வள்ளுவப் பொருந்தகை

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்ல றிவாண்மைக் கடை

என இடிதுரைக்கிறார். அறிவு குறைந்தவர்களே ஞானிகளின் ஆரம்ப கால சாஸ்திரங்களை எடுத்துக்கொண்டு விடாப்பிடியாகப் பேசுவார்கள். இஃது இவர்களின் அறிவுக் குறைவாகும்.

சாந்தோக்கிய உபநிஷதம் போதிக்கும் ஆன்ம ஞானம் :

ஒரு சமயம் சோகமுற்ற நாரதர் குரு சநந்த குமாரரை வணங்கி நான் ருக், யஜுர், சாம, அதர்வணம் மற்றுமுள்ள அனைத்து ஆகமங்கள், இதிகாச புராணங்கள் ஜோதிடம் முதலிய பல சாஸ்திரங்களைப் படித்தேன், இருந்தும் எனக்கு சோகம் போகவில்லை எனக் கூறினார். அதற்கு சநந்த குமாரர் கூறியதாவது, நீர் கற்றதெல்லாம் அபராவித்தை, கீழானவை, அவைகள் வெறும் சப்தமே. ஆன்ம ஞானத்தைப் போதிக்கமாட்டா. ஆகவே அவைகளை விட்டுவிடு. உமக்குச் சோகத்தை நீக்கும் ஆன்மஞானத்தைப் போதிக்கிறேன். நீ ஆன்மா என்பதை அறியாதிருப்பதாலேயே சோக முற்றாய். ஆன்மா ஸத் பொருளாயிற்றே? அதற்கு ஏது சோகம்? நீர் ஆன்ம ஞானத்தை அறியாததால் சோக முற்றாய். அபர வித்தைகளை விட்டுவிடு பர வித்தையை கைக்கொள். நீ ஆன்மா என்பதை அறிவாயாக எனப் போதித்தார். நாரதர் ஆன்ம ஞானத்தை (அண்ட பிண்ட ரகசியம் அதற்கு ஆதாரமான ஸத்தாகிய ஆன்மா பற்றிய ஞானத்தை) அறிந்ததால் சோகத்தை விட்டு விட்டார். அதாவது சமய அஞ்ஞானத்தை விட்டார். மேற்கூறிய அபரஞான சாஸ்திரங்களையும் விட்டார். இவ்வாறாக ஆன்ம ஞானத்தையறிந்து சத்சித் ஆனந்தமாக வீற்றிருந்தார். சோகம் நீங்கப் பெற்றார். சாந்தோக்கிய உபநிஸத் 7-1-4.

Koviloor Digital Library

திருவள்ளுவர் கூறுவதாவது :

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை - *குறள் 331*

அநித்தியமாதகவுள்ளது. இப்பிரபஞ்சம். தோன்றி மறையும் இந்தப் பிரபஞ்சத்தை நித்தியமான ஸத் பொருளெனக் கருதிச் செயல்படுபவர்கள் அறிவில் கேடு கெட்டவர்களாவர், எனத் திருவள்ளுவர் விளக்குகிறார். அநித்திய வஸ்த்துவை நித்தியவஸ்து எனப் பேசுவது அஞ்ஞானம் - அறியாமை. அனைத்து சமயங்களும் ஸத் பொருள் ஞானத்தை விடுத்து அஸத் பொருள்களையே பேசுகின்றன. ஆகவே சமயங்களனைத்தும் ஆன்ம ஞானத்தை அறியாதவைகளே, ஆன்மீகத்தை அறியாத சமயங்களைப் பற்றிப் பேசுவதை ஆன்மீகமென்று பேசுவது அஞ்ஞானம்-அறியாமை.

வள்ளற்பெருமான் கூறியது

'சாதியும் மதமும் சமயமும் காணா ஆதி யனாதியாம் அருட் பெருஞ்ஜோதி' என்வும் 'சாதியும் மதமும் சமயமும் பொய்யென ஆதியிலுணர்த்திய அருட்பெருஞ்ஜோதி' எனவும் சமய வாதிகளை அழைத்து இடித்துரைக்கிறார். அவர் அருளிச் செய்த பேருபதேசத்தில் பொய்யான சைவ வைணவ சமயங்களையும் இதிகாச புராணங்களையும் விட்டு விடும்படி போதிக்கிறார்.

ஆன்மீகத் தத்துவ உண்மை :

பகவான் ஆதி சங்கரர் அருளிச் செய்த ஆத்ம போத்தில் ஆன்ம ஞானத்தைப் பற்றி விரிவாகப் பேசுகிறார். ஆன்மா, ஆன்ம ஞானம், ஆன்மீகம் என்பது பற்றி மேலே கண்ட ஆத்ம ஞானிகள் பலரும் ஞானப்பொருள் பற்றி தெற்றெனப் பகர்ந்துள்ளனர். ஆன்மா, ஆன்மீகம் என்பது நிதர்ஷனமாகவுள்ள சத்தியமாகும். இந்தச் சத்தியத்தை மக்கள் அறிந்து அனுபவிக்க முற்பட்டால் பொய்யான சமயங்களின் இருப்பு இல்லது போய்விடும். அப்படியொரு நிலை ஏற்படுமானால் சமயவாதிகள், சந்நிதானங்கள் மற்றும் புரோகிதர்களின் ஏய்த்துப் பிழைக்கும் வழித் தடைபட்டுப் போகும். அவ்வாறு

Koviloor Digital Library

தடையேற்படுமானால், இவர்களுக்கு மக்கள் வழங்கும் நைவேத்தியம் தட்சணை மற்றும் தானம் அனைத்தும் தடைபட்டுவிடும். இவ்வாறு தடைபடாமல் இருக்கவே இவர்கள் மக்களை சத்தியத்தையறியவிடாது தடையேற்படுத்தி சடங்காச்சார விக்கிரக ஆராதனைகளை வலியுறுத்தி மக்களை ஆன்ம ஞானத்தையறிய விடாது தடைசெய்கின்றனர். மக்கள் ஆன்ம ஞானத்தையறிந்து விடக்கூடாது என்பதற்காக மட்டுமே இவர்கள் இவ்வாறு செய்கின்றார்கள்.

2. தத்துவ உண்மைகள்

பிரபஞ்சத்தில் பொதுவாக மூன்று கருத்துக்கள் நிலவுகின்றன. ஒன்று கற்பனை, பொய், இரண்டு - மாறும் உண்மை, மூன்று - மாறாத உண்மை.

1. கற்பனை :

அனைத்துச் சமயங்களும் ஆண்டவனை (ஸத்பொருளை) கற்பிதமாக வர்ணித்துள்ளன. அவைகள் உண்மையல்ல. ஆகவேதான் வள்ளற்பெருமான் ‘சாதியும் மதமும் சமயமும் பொய்யென ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி’ எனப் பகர்ந்துள்ளார்கள்.

2. மாறும் உண்மை :

எது ஒன்று முன்பும் இல்லையோ பின்பும் இல்லையோ இடையில் தோன்றி மறைந்ததோ அது மாறும் உண்மை. (உ.ம்.- உடல் உயிர் உள்ளம்) உடல் உயிர் உள்ளமாகிய மனிதன் இருக்கும் வரை உண்மையே. அவை மூன்றும் மாறும் உண்மையாகும். அது போலவே பிரபஞ்சமும் பிரபஞ்ச நியதிகளும் மாறும் உண்மையே.

மனித உடல் உயிர் உள்ளம் தோற்றத்திலிருந்து சதா ஒரு பக்கம் வளர்ந்து கொண்டேயிருக்கிறது. மறுபக்கம் தேய்ந்து கொண்டேயிருக்கிறது. இந்த நிகழ்விற்கு முக்கிய காரணம் உண்ணும் உணவே. அதுபோலவே மனதிலும் ஓர் எ்ண்ணம் வந்து நிலை கொண்டிருக்கும் பொழுதே மற்றொரு எண்ணம் மறைந்துவிடுகிறது. இஃது எது போலென்றால் மலையில் மழைபெய்து ஆற்றில் வெள்ளப்

பெருக்கெடுத்து ஆறாக ஓடுவது போல இதனையே தோற்றம் என்கிறோம். ஆற்றில் ஓரிடத்திலோடும் தண்ணீர் மறுகணம் அந்த இடத்தில் அந்த நீர் நிற்பதில்லை. மழை நின்று நீர்வற்றிப்போனால் ஆற்று வெள்ளம் இல்லாது போகிறது. அதுபோல இந்தவுடலும் உயிரும் உள்ளமும் சிருஷ்டி இல்லாத போது, அஃது இல்லாது போகிறது. ஆகவே இந்த உடல் உயிர் உள்ளம் நிலையானது அல்ல. காலத்திற்கேற்றவாறு மாறும் தன்மையது. ஆகவே மாறும் உண்மை என்பது காலதேச வர்த்தமானங்களுக்குக் கட்டுப்பட்டதாகும்.

3. மாறாத உண்மை :

எது ஒன்று மனிதன் தோன்றுவதற்கு முன்பு இருந்ததோ, மனிதன் தோன்றுவதற்கு ஆதாரமாக இருந்ததோ அவன் மறைந்தபின்பும் அழியாது உள்ளதோ அதாவது எது முக்காலத்தும் உள்ளதோ அது மாறாத உண்மை. அதுவே 'சத்' அதுவே தத்துவமாகும். இந்த தத்துவ ஞானத்தைப் போதிப்பதே 'சத்மார்க்கம்' எனும் 'சன்மார்க்கம்' ஆகும். இந்த சத்பொருளை தத்துவ ஞானிகளும் திருவள்ளுவரும் மெய்ப்பொருள், செம்பொருள், பரம்பொருள் என்று கூறுகின்றனர். இதனை மாற்றி கடவுள் என்ற மாயாஜால வார்த்தையைப் பயன்படுத்தும் போதுதான் சமயவாதிகள் பொய்யையும் புனை சுருட்டையும் சூதையும் மனதில் கொண்டு கற்பனையாகப் பேசி மனிதர்களை மயக்கியும் பயமுறுத்தியும் சமயவாதிகள் தங்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருகிறார்கள். இதன் மூலம் சடங்காச்சாங்கள் மற்றும் பொய்க்கதைகளாகிய விஷ்ணு புராணம், தேவி மகாத்மியம், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம், ஸ்கந்த புராணம், இதிகாச புராணங்களாகிய இராமாயணம், மகாபாரதம் பாகவதம் போன்ற கற்பனைக் கதைகளை பக்தி என்ற பெயரில் போதித்து மக்களை ஞானத்தை அறியவிடாது சமய வாதிகள் தடை செய்கிறார்கள். மாறாத உண்மை என்பது கால தேச வர்த்தமானத்திற்குக் கட்டுப்பட்டதல்ல. இதனை நித்தியம் நிர்மலம் ஞான சொரூபம் ஏகம் அபின்னம் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. சமயவாதிகளின் தடையை உடைத்து வள்ளற்பெருமான் சொன்ன சத்மார்க்கப் பேருண்மையைப் போதிப்பதற்கு மதுரை சன்மார்க்க ஆராய்ச்சிமையம் முயற்சிக்கிறது. வள்ளற்பெருமான் அருளால் இது நிறைவேறும் என்று எதிர்நோக்குகிறது.

Koviloor Digital Library

இந்த மாறாத உண்மையாகிய சத்மார்க்கத்தை அறிந்து அனைவரும் கடைபிடித்து உய்யவே விரும்புகிறது. ஆகவே சன்மார்க்கத்தை நமது பெருமான். 'இது சத்தியம் சத்தியம் சத்தியம்' என அறுதியிட்டுக் கூறுகிறார். மேலும் இதன் பரந்த பொருளாக விளங்குவதே மாறாத உண்மையாகிய சன்மார்க்கம் எனும் தத்துவமாகும்.

3. வள்ளற் பெருமான் சாதியும் மதமும் சமயமும் பொய்யெனவும், சைவ வைணவ சமயங்களை விட்டுவிடும்படியும் அவரது அருட்பெருஞ்ஜோதி அகவலிலும் பேருபதேசத்திலும் ஏன் போதித்தருளினார்கள்?

வள்ளற்பெருமான் பேருபதேசத்தில் கூறியது :

.... அதற்கு மேற்பட நாமும் முன்பார்த்தும் கேட்டும் இலட்சியம் வைத்துக் கொண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் இலட்சியம் வைக்க வேண்டாம். ஏனென்றால் அவைகளில் ஒன்றிலாவது குழுஉக்குறியின்றி தெய்வத்தை (அருட்பெருஞ்ஜோதி) இன்னபடியென்றும் தெய்வத்தினுடைய உண்மை இன்னதென்றும் கொஞ்சமேனும் புறங்கவியச் சொல்லாமல் மண்ணைப் போட்டு மூடிவிட்டார்கள் ....

ஆதியிலே இதை மறைத்தவன் ஒருவல்லவன், அவன் மறைத்ததை இது வரைக்கும் ஒருவரும் கண்டபாடில்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை.

வள்ளற்பெருமான் ஏன் மேற்கண்டவாறு கூறினார் என்பதை சத் விசாரம் செய்வோமாக.

1. வல்லான் ஒருவன் யார்?
2. அவன் பூட்டிய பூட்டு என்ன?
3. வல்லான் ஒருவன் பூட்டிய பூட்டைத் திறக்க ஏன் இதுவரை ஒருவரும் வந்தபாடில்லை? அதன் பொருள் என்ன?

Koviloor Digital Library

வள்ளற் பெருமான் வல்லான் ஒருவன் என்று குறிப்பிடுவது ஜோதிடம் எழுதியவரும், தன்னைப் பிராமணன் என்று கருதிக் கொண்டவருமான பராசரருக்கும் சூத்திர மீனவப்பெண்ணான மச்சகெந்திக்கும் மகனாக பிறந்த வேதவியாசரே ஆவர்.

வேதவியாசர் பூட்டிய பூட்டு

ஆதியில் வாய்மொழியாகப் பேசப்பட்டு வந்த வேதத்தை, எழுத்து வடிவில் கொண்டுவந்து ருக், யஜுர், சாம, அதர்வணம் எனும் நான்கு வேதங்களாகத் தொகுத்ததாகும். இந்த வேதங்களை வள்ளற்பெருமான் 'தோன்றிய வேதாகமம் ஜாலமென உரைத்தேம்' எனக் கூறுகிறார்கள். வேதங்களனைத்தும் ஜாலமென்றும் பொய்யென்றும் சூது என்றும் பொருள்படப் பேசுகிறார். ஆகமம் என்று கூறப்படுவது சமயங்களின் விக்கிரக ஆராதனை மற்றும் சடங்காச் சாரங்களைக் குறிப்பதாகும். இவைகளனைத்தும் பொய்-கற்பனை-நம்பிக்கையின் அடிப்படையில் பேசப்பட்டவை. இவைகட்கெல்லாம் ஆதாரம் ஏதுமில்லை.

வேதவியாசர் எழுதிய இதிகாசமாகிய மகாபாரதமும், புராணங்களாகிய விஷ்ணுபுராணம், பிரம்மபுராணம், சிவபுராணம் என்று கூறப்பட்ட 18 புளுகு மூட்டைப் புராணக் கதைகளாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு தமிழில் பேசப்பட்ட பெரிய புராணமும் திருவிளையாடற் புரணமும் அண்டப் புளுகாகும். இவைகளையே வள்ளற் பெருமான் பூட்டு என்று குறிப்பிடுகிறார். இது போன்றே வேதவியாசரைப் பின்பற்றி சேக்கிழார் பெருமானும் பரஞ்ஜோதி முனிவரும் பெரிய புராணத்தையும் திருவிளையாடற் புராணத்தையும் இயற்றி பெரும் மோசடி செய்துள்ளார்கள்.

Koviloor Digital Library

மஹாபாரத்தில் கூறப்பட்ட கீதையில் சுருதித் தத்துவ முரண்பாடுகள்

வேத வியாசரால் கூறப்பட்ட மஹாபாரதம் என்ற இதிகாசத்தின் ஒரு பகுதியாகிய "கீதை சுலோகங்கள்"

அத்தியாயம்-2 சாங்கிய யோகம்

சுலோகம் : 13

ஆத்மாவுக்கு இவ்வுடலில் இளமையும் யெளவனமும் மூப்பும் உண்டாவது போல் வேறு உடல் எடுப்பதும் அமைகிறது. தீரன் அதன் பொருட்டு மயங்கான்.

சுலோகம் : 22

பழுதுபட்ட துணிகளைக் களைந்துவிட்டு மனிதன் புதியவைகளைப் போட்டுக் கொள்ளுவது போன்று, ஆத்மா பழைய உடலங்களை நீத்துப் புதியன புகுகிறது.

சுலோகம் : 51

நடுவு நிற்கும் ஞானிகள் வினைப்பயனை விட்டொழித்து, பிறவித்தளைகளை நீக்கி, கேடில்லாப் பெருநிலையடைகிறான்.

அத்தியாயம் - 4 - ஞானகர்ம சந்யாசயோகம்

சுலோகம் -5

எனக்கும் உனக்கும் அர்ஜீனா, பிறவிகள் பல கழிந்து போயின, அவற்றையெல்லாம் நான் அறிகிறேன், நீ அறிய மாட்டாய்.

சுலோகம் - 6

நான் பிறப்பற்றவன், அழிவற்றவன், உயிர்களுக்கெல்லாம் ஈசன் எனினும் என் பிரகிருதியை வசப்படுத்தி ஆத்ம மாயையினால் அவதரிக்கிறேன்.

Koviloor Digital Library

சுலோகம் - 7

எப்பொழுதெல்லாம் அறம் அழிந்து போய் மறம் மேலெழுகிறதோ, அப்பொழுதெல்லாம் என்னை நான் பிறப்பித்துக் கொள்ளுகிறேன்.

சுலோகம் - 8

நல்லாரைக் காப்பதற்கும் கெட்டவரைக் கரந்தெடுக்குதற்கும், தர்மத்தை நிலை நாட்டுதற்கும் யுகந்தோறும் நான் அவதறிக்கிறேன்.

அத்தியாயம் - 6 - தியான யோகம்

சுலோகம் : 46

பெரும் முயற்சியையுடைய யோகி, பாபங்களற்றுப் புனிதவானாய்ப் பல பிறவிகளில் பக்குவமடைந்து பரகதியைப் பெறுகிறான்.

சுலோகம் : 47

யார் சிரத்தையுடன் சித்தத்தை என்பால் (கிருஷ்ணன்) வைத்து என்னைப் பூஜிக்கிறானோ அவன் யோகிகள் எல்லாருள்ளும் மேலானவன் என்பது என் கருத்து.

அத்தியாயம் - 8 - அக்ஷரப் பிரம்ம யோகம்

சுலோகம் : 24

தீ, ஒளி, பகல், சுக்கிலபக்ஷம், உத்திராயணத்தின் ஆறு மாதங்கள் - இவைகளில் உடலை நீத்துப் போகிற பிரம்ம ஞானிகள் பிரம்மத்தை அடைகிறார்கள்.

சுலோகம் : 25

புகை, இரவு, கிருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயணத்தின் ஆறு மாதங்கள் - இவைகளில் போகின்ற யோகி சந்திரனது ஒளியைப் பெற்றிருந்து மறுபிறவியடைகிறான்.

Koviloor Digital Library

விளக்கம் :

கீதோபதேசத்தில் 1 முதல் 18 அத்தியாயங்கள் உள்ளன. ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் பெயர் கொடுத்து அத்னை யோகம் என்றே குறிப்பிடுகின்றது. யோகத்திற்கு ஆசான் பதஞ்சலி, அவர் கருத்துப்படி யோகம் என்றால் என்ன என்பதையறிவோம். அதாவது இரண்டு ஒன்று கூடுதல் என்பதாகும். அதாவது மனித மனமும் கடவுளும் ஒன்றுபடுவது என்பதாகும்.

வேதவியாசருடைய கூற்றுப்படி ஜீவாத்மா பரமாத்மாவோடு இணைவதாகும். இரண்டு ஒன்று கூடுதலை துவைதம் என்று தத்துவ உலகம் பேசுகிறது. உலகிலுள்ள சமயங்கள் அனைத்தும் இந்தக் கருத்தையே கொண்டுள்ளது. இதனை ஸத்விசாரம் செய்யும் பொழுது சைவம் முதலிய சமயங்கள் துவைதத்தைப் பேசுகின்றன. வைணவ சமயம் வஸிஸ்டாத் வைதத்தைப் பேசுகிறது. அதாவது ஜீவாத்மா பரமாத்மாவிடமிருந்தே வந்தது. அவை இரண்டல்ல-ஒன்று இரண்டாகவில்லை, - அஃது ஏகம் என்றும் அதனை ஸத் என்றும் சுருதி குறிப்பிடுகிறது. ஆகவே இதனை 'ஏகம் ஸ்த்' என்றும், அத்வைதம் என்றும், அஃதாவது இரண்டற்றது என்றும் கூறுகிறது. கீதோபதேசம் சுருதித் தத்துவதிற்கு எவ்வாறு முரணாகவுள்ளது என்பதை ஸத்விசாரம் செய்வோமாக.

பிழைபட்ட பகவத் கீதையை சுருதி மற்றும் பிரம்ம சூத்திரம் நிராகரிக்கிறது

முகவுரை :

சுருதி சுமிருதி - விளக்கம்

வேதவியாசர் இயற்றிய மகாபாரதத்தில் கிருஷ்ணன் அர்ஜீனன் என்ற இரு கதாபாத்திரங்களைப் படைத்தார். யுத்த களத்தில் கிருஷ்ணன் அர்ஜீனனுக்குப் போதிக்கிறார். அந்தப் போதனையை 'கீதோபதேசம்' என்று பேசப்படுகிறது. இதனை சுமிருதி-வழி நூல் என்று கூறுகின்றனர். அதன்பொருள் சுருதியாகிய உபநிஷதங்களைப் படித்து அதனடிப்படையில் சொந்த யுக்திகளைப் பயன்படுத்திப் பேசப்படும்

சாஸ்திரங்களை 'சுமிருதி' என்கின்றனர். சுருதி என்பது உபநிஷதங்களைக் குறிக்கும். அதாவது மூலநூல் (Original) ஆகும். இவைகள் மாறாத தத்துவத்தைப் போதிப்பனவாகும். இவைகள் மூல நூல்கள் (Original) என்றும் அழைக்கப்படுகின்றன. இந்த மூல நூல்களின் அடிப்படையை வைத்து, பின்னால் தோன்றிய ஆசான்கள் தமது சொந்தக் கருத்தினைப் புகுத்தி பேசிய சாஸ்திரங்கள் சுமிருதி என்று அழைக்கப்படுகின்றன. சுருதி தத்துவத்திற்கும் சுமிருதிக் கருத்திற்கும் முரண்பாடு ஏற்படுமானால், சுமிருதியை விடுத்து சுருதியைப் பிரமாணமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்.

இதன் மூலம் நாமறிவது. சுருதி மேலானது என்றும், மாற்றத் தக்கதல்ல என்பதுமாகும். சுமிருதி என்பது கீழானது மாற்றத்திற்குரியது என்பதுமாகும். மேலும் விவேகானந்தர் கூறுவதாகவது : சுருதி கூறியவர்கள் நிர்பயமாக சத்தியத்தைப் பேசியுள்ளார்கள் எனச் சிறப்பித்துக் கூறுகிறார். இந்தத் சுருதித் தத்துவங்களை நமது பாரததேசத்தின் உயிர் மூச்சாகவும், ஆத்மாவாகவும் பரப்பிரம்மாகவும் பாவித்து மக்கள் வாழ்கின்றனர். இவைகளைச் சிதைக்கவோ அழிக்கவோ ஒரு போதும் பாரத மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். இந்த ஞானதத்துவத்தை உயிரே போனாலும் அழிந்து போக அனுமதிக்கக் கூடாது என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். இதனை அவரது ஞானதீப நூல்களில் காண்க.

சுருதி என்று அழைக்கப்படும் 108 உபநிஷதங்களும் பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு ஆசான்களால் கூறப்பட்டது. இவைகளிலிலேயே ஒன்றுக்கொன்று முரண்பாடாகப் பலவிடங்களில் பேசப்படுகின்றன. இந்தச் சுருதியில் பேசப்படும் தத்துவங்கள்.

1. 'அயாத்ம பிரம்ம'- (ஜீவனின் ஆத்மா பிரம்மமே)
2. 'தத்துவ மஸி' - (அது நீ - நீ பிரம்மமே)
3. 'அஹம் பிரம்மாஸ்மி' (நான் பிரம்மமே)
4. 'ஓம் தத் ஸத்' –'ஸ' என்ற பரம்பொருளும் 'த்' என்ற பிரபஞ்சமும் 'அது' (தத்) என்று குறிப்பிடப்படும் சொரூபமே. அந்தச் சொரூபமே பரம் பொருளாகவும், பிரபஞ்சமாகவும்

Koviloor Digital Library

உணரப்படுகிறது. அந்தப் பரம்பொருளே பிரணவ நாதமாகி, பிரபஞ்சமாய் மலர்கிறது. அதிலொன்றே ஜீவராசிகளும் மனிதனுமாகும் (மாண்டூக்கிய உபநிஷதம்).

5. ஏகம் ஸத் - 'ஸ' என்ற பரம்பபொருளும், 'த்' என்ற பிரபஞ்சமும் இரண்டாகப் பேசப்பட்டாலும் உண்மையில் அஃது இரண்டாக இல்லை. அஃது ஏகமாகவும் அபின்னமாகவுமுள்ளது. அஞ்ஞானத்தில் இரண்டாகவும், ஞானத்தில் ஏகமாகவும் அறியப்படுகிறது. ஆகவே அதனை அபின்னம், அத்வைதம், ஏகமென்றும் சுருதி கூறுகிறது. மேற்கண்ட விளக்கங்கள் யா(பிரம்ம சூத்திரத்தில் தெளிவாகப் பேசி உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்த மகாவாக்கியங்களுக்கு எதிராகப் பேசும் பிழைபட்ட உபநிஷதங்களைப் பொருளற்றது எனக்கருதி விட்டுவிட வேண்டும்.

மேற்கண்டதன் மூலம் நாமறிவது, பிரம்மம் என்ற ஸத்பொருள் நாம ரூப குண தோஷ மற்றது என்றும்: காலதேச வர்த்தமானம் கடந்தது என்றும், ஏகம் என்றும், அத்துவிதம் என்றும், ஸத் என்றும் பேசப்படுகிறது. இந்தத் தத்துவத்திற்கு எதிராகப் பேசப்படும் கருத்துக்கள் பற்றி கீதோபதேசம் என்ற சுமிருதி சுருதித் தத்துவத்திற்கு எப்படி மாறுபட்டும், வேறுபட்டும், முரண்பட்டும் சுருதியைச் சிதைத்தும் பேசுகிறது என்பதை சத்விசாரம் செய்வோமாக. பாகவதமும் அதைச் சார்ந்த இதிகாச புராணங்களும் சிவாகமங்களும் மற்றும் சாண்டில்யர் இயற்றிய வைணவ சம்பிரதாயத்திற்கு அடிப்படையான பாஞ்சராத்ரப் பிரகாரணம் என்ற ஆகமமும் சுருதித் தத்துவ உண்மைக்கு வேறாகவும் மாறாகவும் கூறுகிறது. இதனை பிரம்ம சூத்திரம் அத்தியாயம் இரண்டு மகாபாரதத்தையும் அதில் கண்ட கீதோபதேசத்தையும் நிராகரிக்கிறது.

மேற்கண்ட பொருள் பற்றி விவாதிக்கவும் அறியவும் முதலில் சாங்கிய தத்துவம், யோகம், வேதாந்தம் என்ற சுருதியை அறிந்திருக்க வேண்டும். அவ்வாறு மேற்கண்ட தத்துவத்தை அறியாதவர்கள். அறியத் தகுதியுடையவர்களுமல்லர்.

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR A. No. 12070

இந்தப் பிரபஞ்சம் முழுவதும் பிரம்மமே. இந்த ஆத்மாவும் பிரம்மமே. இந்தப் பிரம்மம் நான்கு பாதங்களாகிய ஜாக்ரதம், சொப்பனம், சுசுப்தி, துரியமாகயுள்ளது.

ஆன்மா பிரபஞ்சமாகக் காட்சியளிக்கிறது. இஃது இரண்டாகப் பேசப்பட்டாலும் அஃது ஏகம், ஆகவே "ஏகம் ஸத் விப்ர பஹுதா வதந்தி" என்று சுருதி குறிப்பிடுகின்றது. ஏகமாகிய பரம் பொருளை இரண்டாக அதாவது உடல் வேறு ஆத்மா வேறு என்று துவைதமாகக் கீதை குறிப்பிடுகிறது. அது சுருதிக்கு முரணானது. (மாண்டூக்கிய உபநிஷதம்)

பிரம்ம சூத்திரம் கூறுவதாவது:

ஸத்தென்றும் அஸத்தென்றும் பேசுவது அஞ்ஞானம், சேதனம் அசேதனம் (உயிருள்ளது, உயிரற்றது) என்று பேசுவது அஞ்ஞானம். (இதன் விளக்கம் அண்ட பிண்ட இரகசியத்தில் காண்க) காரண காரியம் பேசுவது அஞ்ஞானம். ஏகம் அநேகமாக அஞ்ஞானத்தில் காணப்படுகிறது. ஞானத்தில் அநேகம் ஏகமாகக் காணப்படுகிறது.

பகவான் ஆதி சங்கரரின் மானுஷ்ய பஞ்சகம் கூறுவதாவது :

பிரம்மமும் பிரபஞ்சமும் ஒன்றே. அவை வேறு வேறு அல்ல எனக்கூறுகிறது. இவையனைத்தும் ஏக ஆத்மாவே என்றும் கூறுகிறது.

சுவாமி விவேகானந்தர் கூறுவதாவது :

ஆத்மா பிறப்பதுமில்லலை இறப்பதுமில்லை. அஃது எங்கும் வியாபகமாயிருப்பதால் அது போகிறது வருகிறது என்பது பிழை. இந்த உடல் மற்றும் பிரபஞ்சத் தோற்றங்களெல்லாம் ஆத்மாவின் வெளித் தோற்றங்களே (Manifestation) ஆத்மாவிற்கு மறுபிறப்பு உண்டு என்று கூறுவது கற்பிதம், பாப புண்ணியத்திற்கு ஏற்றபடி மறுபிறப்பு எடுக்கிறது என்று சொல்லுவது அதை விடவும் பெருங்கற்பிதம்.

Koviloor Digital Library

சுருதியின் சாரம் :

ஜாதி, மதம், குலம், கோத்திரம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்டதும், பெயர், வடிவம், குணம், குற்றம் ஆகியவையற்றதும், இடம், காலம், காரண காரியம் முதலியவற்றைக் கடந்தது எதுவோ அது பிரம்மம். 'அந்தப் பிரம்மமாகவே நீ உள்ளாய்' (தத்துவ மஸி) என்பது மஹாவாக்கியமாகும். (சாந்தோக்கிய உபநிஷத்)

இப்படிப்பட்ட பிரம்மத்தை - ஆத்மாவை - பிரபஞ்சத்தை - மானிடனை என்னவென்று அறியாது பிழைபடத் திரிபு பட்டு உள்நோக்கத்துடன், கீதை மறைத்து சூதாகப் பேசுகிறது. இது வேதவியாசரின் சித்து விளையாட்டாகும். அதுவே பூட்டுமாகும்.

வியாசர் காலங்கடந்த ஆத்மாவையும், பிரபஞ்சத்தையும் அதில் காணப்படும் அனைத்தையும் காலத்திற்குக் கட்டுப்பட்டதாகக் கூறுகிறார். இஃது அவரது அறியாமை - அஞ்ஞானம்.

'அயாத்ம பிரம்ம' என்று சொல்லக் கூடிய சுருதியில் ஆத்மா பிரம்மம் என்றே குறிப்பிடுகிறது. இதனை மறுத்து ஆத்மாவிற்குப் பலபிறவிகள் உண்டு என்று கீதையில் கூறப்படுகிறது. இது மூடத்துவம். சுருதிக்கு முரணானது.

ஏகமாகிய ஸத்பொருளை கடவுள் என்றும் மானிடன் என்றும் இரண்டாக குறிப்பிடுகிறது. அதாவது துவைதமாகப் பேசுகிறது மகாவாக்கியம் கூறுவதாவது: 'ஏகம் ஸத்' என்பதாகும். அதாவது சத்பொருளைத் தவிரப் பிரபஞ்சத்தில் வேறொன்றும் இல்லை என்பதாகும். இதிகாச புராணங்களில் கூறப்பட்ட கற்பனையான கடவுள், அவதாரம், மானிட இரட்சிப்பு, மானிட சம்ஹாரம் எனப்பலவாகப் பேசி கற்பிதமான துவைதத்தை நிலைநிறுத்த கீதை முயற்சிக்கிறது. இது சுருதித் தத்துவத்திற்கு எதிரானது. மோசடியானது. மானிடன் ஞானத்தை அறிந்துவிடக் கூடாதென்று சூதாகப் புனையப்பட்ட கற்பனைக் கதையாகும். கீதை கூறக்கூடிய 'யார் சிரத்தையுடன் சித்தத்தை (கிருஷ்ணன்) என்பால் வைத்து என்னைப் பஜிக்கிறானோ. அவன் யோகிகள் எல்லாருள்ளும் மேலானவன் என்றும், "பெரும் முயற்சியுடைய யோகி பாபங்களற்றுப் புனிதவானாய்ப் பலபிறவிகளில் பக்குவமடைந்து பரகதியைப் பெறுகிறான்" என்றும் கூறுகிறது. இது பிழை.

Koviloor Digital Library

இதற்கு சுருதி கூறுவதாவது :

நித்தியமாயும், ஞானசொரூபமாயும் நிர்மலமாயும், ஏகமாயும் உளது ஆத்மா என்பதாகும். இதற்கேது மறுபிறவி மாற்றமேயற்ற நித்தியவஸ்துவை பல பிறவிகளெடுப்பதாகவும், இதிகாசத்தில் கூறப்பட்டக் கற்பனைக் கடவுளை பல பிறவிகளிலும் கர்மம் செய்து பஜித்தும் அடைவதாகக் கீதை கூறுகிறது. இது பெரும் மோசடி - மானிடனை ஞானத்தையறிய விடாது தடைசெய்யக்கூடிய யுத்தி உபாயமாகும்.

மேற்கண்ட விஷயம் பகவான் ஆதிசங்கரர் மண்டனமிஸ்ரர் இடையே நடந்த ஸம்வாதத்தில் பேசப்படுகிறது.

சங்கரரின் விளக்கம் :

சுருதி மனிதன் ஈஸ்வரனுக்கு யாகம் யக்ஞம் செய்பவன் அல்ல என்றும், அவன் ஈஸ்வரனே என்றும் குறிப்பிடுகிற சாந்தோக்கிய உபநிஷத்தில் உத்தாலகர் சுவேத ஹேதுவை அழைத்துக் கூறியது. 'தத்துவமஸி' 'நீ அந்தப்-பிரம்மமே' என்பதாகும். மேற்கண்டதத்துவத்தை கீதோபதேசம் எதிர்த்தும் திரித்தும் பேசுகிறது. ஆகவே பிரம்ம சூத்திரம் ஞாயப்படி சுமிருதியாகிய கீதோபதேசம் சுருதிக்கு எதிராகயிருப்பதால் பிழைபட்டது என்று கூறி நிராகரிக்கிறது.

ஆகவே தான் வள்ளற்பெருமானவர்கள் 'சாதியும் மதமும் சமயமும் பொய்யென்றும், சைவ வைணவ சமயங்களை விட்டு விடும்படியும் வேதம் ஆகமம் இதிகாச புராணங்கள் ஜாலமென்றும் பொய்யென்றும் அவைகளையும் விட்டுவிடும்படியும் ஞானத்தைப் போதித்தருளினார்கள்.

மாணிக்கவாசகப் பெருமானவர்கள் தமது திருவாசகத்தில் மானிடரின் பிறப்பும் இறப்பும் கற்பனை-பொய் என்று கீழ்கண்ட பாடலில் குறிப்பிடுகிறார்.

'வைத்தநிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி எனும்
பித்த வுலகிற் பிறப்போ டிறப் பென்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்த கத்தேவர்க் கேசென்றூதர்ய்க் கோத்தும்பி.

Koviloor Digital Library

II. சாங்கிய யோகம் :

அத்-2-67 'கப்பலை காற்றானது நீர்மேல் நிலைகுலைப்பது போன்று, அலைகின்ற இந்திரியங்களைப் பின்தொடரும் மனது அவனது விவேகத்தை அரிக்கின்றது'

அத்-2-68 'யாருடைய பொறிகள் புலன்களினின்று பிரிக்கப்பட்டிருக்கின்றவோ அவனது அறிவு நிலை பெற்றுள்ளது'

விளக்கம் :

மேற்கண்ட சுலோகங்கள் கண், காது, மூக்கு, நாக்கு, உடல் ஆகிய கருவிகள் பற்றியும் இவைகளின் செயலுக்கு ஆதாரமாயுள்ள பஞ்சேந்திரியங்கள் என்று அழைக்கக்கூடிய புலன்கள் பற்றியும், மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்ற நான்கு அந்தக் காரணங்களைப் பற்றியும் பேசுகிறது. மேற்கண்ட கருவிகளும் புலன்களும் சுயமாய் செயல்படுவதாகவும், அதை மனது பின் தொடர்வதாகவும் கீதை குறிப்பிடுகிறது.

மாண்டூக்கிய உபநிஷதம் எனும் சுருதி கூறுவதாவது: 5 கருவிகள், 5 புலன்கள் மனம் சேர்ந்து செயல்படுவதை ஜாக்ரதம் என்றும்: மனதும் 5 புலன்களும் சேர்ந்து செயல்படுவது கனவு என்றும்; 5 கருவிகளும் 5 புலன்களும் செயல்படாத நிலையில் மனம் மட்டும் இருப்பதை சுசுப்தி என்றும் கூறுகிறது. மேற்கண்ட மூன்று நிலைகளிலும் மனம் இருக்கிறது. ஆனால் கருவிகளும் புலன்களும் மூன்று நிலைகளிலும் தொடர்ந்து இருப்பதில்லை. இந்த மனமற்ற நிலையில் துரியமென்றும் சொரூபமென்றும் பரம் என்றும் மெய்ப்பொருளென்றும் செம்பொருளென்றும் ஞானிகள் கூறுவர். மேற்கண்ட முதல் மூன்று 1. கருவிகள், 2. புலன்கள், 3. மனம். இவை மூன்றும் நிலையில்லாதவைகள், அநித்தியம், தோன்றியிருந்து மறைந்து போகக் கூடியது. இந்த அநித்திய வஸ்துக்கள் பற்றிப் பேசுவது அபராவித்தை; நித்திய வஸ்துவாகிய துரியத்தைப் பேசுவது பராவித்தை, மனம் இன்றேல் பொறிபுலன்கள் செயல்படாதென்பது ஒவ்வொரு மனிதனின் அனுபவ அறிவாகிறது. அதாவது மனம் செயல்படாவிட்டால் பொறிபுலன்கள் செயல்படா. எதுபோலென்றால், மின்சாரமின்றேல் இயந்திரங்கள் செயல்படா. அது போல மனமின்றேல் கருவிகளும் புலன்களும் செயல்படா என்பது

Koviloor Digital Library

பிரத்தியட்ச உண்மை: இதைப் பற்றி மகான் கபிலர் இயற்றிய சாங்கிய தத்துவத்தில் பேசப்பட்டுள்ளது. இதனை மனோதத்துவம் என்று அழைக்கின்றோம். கீதோபதேசம் என்ற சுமிருதியில் பேசப்பட்டதானது மாண்டூக்ய உபநிஷத் எனும் சுருதிக்கும் கபிலர் இயற்றிய சாங்கியத்தில் கண்ட மனோதத்துவத்திற்கும் எதிராகவுள்ளது.

மேலும் மயக்கமுற்ற ஒரு மனிதனின் (கோமா)வில் மனம் செயல்படுவதில்லை. அவனுக்கு மனமற்ற நிலையில் கருவிகளும் புலன்களும் செயல்படாதுள்ளது. இதன் மூலம் நாம் அறிவது. மனமே கருவிகளையும் புலன்களையும் தூண்டிச் செயல்படச் செய்கிறது என்பதாம். அதாவது கீதையில் கூறியபடி கருவிகளும் புலன்களும் சுயமாகச் செயல்படா என்பதுத் தெளிவு.

ஆழ்ந்து படித்துக் கொண்டிருக்கும் ஒரு மனிதன் காதுகளில் மணி ஓசைத் தாக்கினாலும் அந்தக் கருவியும் புலனும் உணர்வதில்லை. காரணம் அவனுடைய மனம் கண்ணென்ற கருவியும் மற்றுமுள்ள அதன் புலனோடும் கூடி புத்தகத்தின் படிப்பில் ஒரு மித்து இருப்பதாலேயே. ஆகவே கீதையில் கூறப்பட்ட கருத்து பிழைபட்டது. சுருதிக்கும் சாங்கிய தத்துவத்திற்கும் முரணானது.

III. கீதை மூடத்துவத்தைப் பேசுகிறது

அத்தியாயம் - 3 - கர்ம யோகம்

சுலோகம் 24 :

நான் (கிருஷ்ணன்) கர்மம் செய்யாவிட்டால் இவ்வுலகங்கள் அழிந்துபோம். ஜாதிக் கலப்புக்கும் நானே கர்த்தாவாய் மக்களைக் கெடுத்தவன் ஆவேன்.

அத்தியாயம்- 4 - ஞான கர்ம ஸந்யாச யோகம்

சுலோகம் 13 :

"குணத்துக்கும் கர்மத்துக்கும் ஏற்ப நான்கு வருணங்களை (பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன்) நான் படைத்தேன். அதற்குக் கர்த்தா எனினும் என்னை அவிகாரியென்றும் அகர்த்தா என்றும் அறிக."

Koviloor Digital Library

எனக் கிருஷ்ணன் என்ற கதாபாத்திரம் கூறுவதாக வேதவியாசர் கூறுகிறார்.

விளக்கம் :

சுருதியில் காலதேச வர்த்தமானம் (கர்மமும், குணங்களும்) கடந்தது ஆத்மாவெனக் குறிப்பிடுகிறது. விஞ்ஞானப் பூர்வமாக ஜாதி வர்ணீயங்களுக்கு எந்த ஆதாரமுமில்லை என்று விஞ்ஞானம் நிரூபித்துள்ளது. இப்படிப்பட்ட ஒரு பெரும் உண்மையை மறைத்து அழித்து, சிதைத்து மக்கள் மத்தியில் வர்ணீய பேதத்தையும் ஜாதி பேதத்தையும் கற்பிதமாகப் பேசி நிலை நிறுத்தக் கீதையில் வேதவியாசர் முயன்றுள்ளார். இதன் விளைவாக இன்று வரை இவ்வுலகத்தில் ஏற்பட்டத் துன்பங்கள், சிதைவுகள், அழிவுகள் அளவு சொல்ல முடியாது. இந்த மகாபாவத்தை கீதை என்ற நூல் போதிப்பதால் மக்கள் எந்த அளவு அறியாமையில் உழல்கிறார்கள் என்பது தெளிவு. ஆகவே தான் வள்ளற்பெருமான்

ஜாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி என்றும்

நால்வருணம் ஆச்சிரமம் ஆச்சார முதலா
நவின்ற கலைச் சரிதமெலாம் பிள்ளைவிளையாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவாரிலை
நீ விழித்து இது பார் - என்றும் கூறுகிறார்.

ஆகவே ஜாதிபேதம் வர்ணீய பேதம் பேசும் வேதவியாசனின் மூளையைக் குப்பைத் தொட்டியில் போடுங்கள். கீதையில் இது போன்று பல இடங்களில் பிழைபடப் பேசப்படுகிறது. இதனை ஆய்வு செய்தால் அறிந்து கொள்ளலாம்

"கோழிக்குழம்பு விஷம்" - உவமை என்ன?

பொதுவாக நமது கிராமங்களில் இருவருக்குள் பகைமை ஏற்படுமானால் ஒருவர் மற்றவரின் அழிவையே விரும்புகிறார். அதற்கு

Koviloor Digital Library

அவர்கள் கையாளும் உபாயம் ஒன்றுள்ளது. ஒருவர் மற்றவரிடம் பொய்யான நட்பைப் பேசி சமாதானம் செய்வர். இந்தச் சமாதானத்தைக் கொண்டாடுவதற்காக எதிரியை அழைத்து விருந்து வைத்து அன்பாக இருப்பது போல் பாவனை செய்வார்கள். இதன் வெளிப்பாடுதான் விருந்து. ஏராளமான பொருட் செலவில் விருந்து ஏற்பாடு செய்து ருசியான கோழிக்குழம்பும் தயாராகிறது. அதில் பகைவனுக்குத் தெரியாமல் சிறிது விஷத்தை கலந்து மிக மகிழ்வுடன் விருந்து படைக்கப்படுகிறது. இது பகைச்செயல் என்று அறியாது பகைவரும் கோழிக்குழம்பு ருசியாக உள்ளதென்று திருப்தியாக உண்டு மகிழ்கிறார். அதன் விளைவு பகைவனின் மரணம் ஆகும். இதே போல் தன்னைப் பிராமணனாகக் கருதிக் கொள்ளும் வேதவியாசர் இந்த மனித சமுதாயத்தைத் தனக்கும் தனது சந்ததியர்களுக்கும் என்றென்றும் அடிமையாக்க இவர் கையாண்ட உபாயமே வர்ணீயபேதம், துவைத போதனை, கற்பனைக் கடவுள், கடவுள் அவதாரம், சத்தியத்திற்கு மாறான இதிகாச புராணம் வேதாகமங்கள் முதலியனவாகும். இதனையே வள்ளற் பெருமாள் 'வல்லான் ஒருவன் பூட்டிய பூட்டு' என்கிறார். இந்த வல்லான் ஒருவனின் பூட்டை உடைத்தெரியக்கூடிய ஆயுதமே சுருதி. பிரம்ம சூத்திரம், சங்கரரின் மானுஷ்ய பஞ்சகம், நிர்வாண சட்கம் வள்ளற்பெருமனின் அருட்பெருஞ்ஜோதி அகவல் மற்றும் பேருபதேசம். மதுரை தெற்கு வாசல் பிரம்மானந்த சுவாமிகளின் ஸ்ரீ பிரம்மானந்த அனுசந்தான விசாரயுக்தி ரத்னாகாரம் முதலிய நூல்களாகும். வள்ளற் பெருமான் அருளிச் செய்த அகவலில்

இகநிலைப் பொருளாய் பரநிலைப் பொருளாய்
அகமறப் பொருந்திய அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதியும் பிரபஞ்சமும் ஏகம்-அபின்னம்-ஒருமை-அத்வைதமாகும்.

தானொரு தானாய் தானே தானாய்
ஊனுயிர் விளக்கும் ஒரு தனிப்பொருளே
அருட்பெருஞ்ஜோதியே பிரபஞ்சமாகவும் மானிடராகவும் காட்சியளிக்கிறது.

மேயினை மெய்பொருள் விளங்கினை நீ அது
ஆயினை என்றருள் அருட்பெருஞ்ஜோதி - தத்துவமஸி

Koviloor Digital Library

மேற்கண்டவைகளே அருட்பெருஞ்ஜோதியாகும். இதற்கு மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட சைவம் முதலான அனைத்துச் சமயங்களும் அஞ்ஞானமாகும். கோழிக்குழம்பு ருசியாயுள்ளது போல் வேதாகமம் இதிகாச புராணங்களில் சில நல்ல தகவல்கள் பேசப்படுகிறது. இந்தத் தகவல்கள் மனித சமுதாயத்தை வசியப்படுத்தி மயக்குகிறது. எப்படிக் கோழிக்குழம்பிலிருந்த விஷத்தையறியாது பகைவன் உண்டு மகிழ்ந்து மடிகிறானோ அவ்வாறே வேதாகமம் இதிகாச புராணங்களில் நல்ல கருத்துக்கள் பேசப்பட்டு அதனுள் விஷமாகிய வர்ணீய பேதம் ரட்சிப்பு துவைத அஞ்ஞானம், கற்பனைக் கடவுள், அவதாரம், சம்ஹாரம் மோட்சம் வழங்குதல் பாவபுண்ணியத்திற்கேற்ற பலன்கள் போன்ற விஷம் புகுத்தப்பட்டுள்ளது.

அது போன்றே பிராமணன் என்பதும் கற்பனையானதே இந்தக் கற்பனையில் மூழ்கிப்போன வேதவியாசரும் அவர்தம் சந்ததியரும் சமயங்களிலுள்ள புரோகிதர்களும் சந்நிதானங்கள் மடாதிபதிகளும் கற்பனையாகப் போதிக்கப்பட்ட மேற்கண்டவைகளைத் தங்களது வாழ்வில் பிழைக்கும் வழியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இஃது எது போலென்றால் கோழிக்குழம்பில் விஷம் கலந்தது போலாகும். உண்டவன் மடிந்தே தீருவான். ஆகவே மேற்கண்ட விஷத்தை மக்கள் விட்டுவிடும்படி வள்ளற் பெருமான் போதித்தருளினார்கள்.

ஆகவே வர்ணபேதம் பேசுவது அஞ்ஞானம். இவைகள் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமைக்கு எதிரானதாகவும் தடையாகவும் உள்ளது. பகவத்கீதையில் கிருஷ்ணன் என்ற கதாபாத்திரத்தின் மூலம் விஷயங்கள் பேசப்பட்டாலும் அதனை எழுதியது வேதவியாசரே. இதற்குக் கர்த்தா வேதவியாசரே. இந்தப் பூட்டை உடைக்கும் முகமாக வள்ளற்பெருமான் திருவருட்பாவில் கீழ்கண்டவாறு கூறுகிறார்.

நால்வருணம் ஆச்சிரமம் ஆச்சார முதலா
நவின்றகலைச் சரிதமெல்லாம் பிள்ளை விளையாட்டே
மேல்வருணம் தோல் வருணம் கண்டறிவாரிலை
நீ விழித்து இதுபார், எனவும்

தோன்றிய வேதாகமம் ஜாலமெனஉரைத்தேம்
சொற்பொருளும் இலக்கியமும் பொய்யெனக்கருதேல்

Koviloor Digital Library

எனவும் வேதவியாசரால் இயற்றப்பட்ட வர்ணாசிரம தர்மம் மற்றும் வேதாகம இதிகாச புராணங்களை கற்பனை என்றும் கூறி கண்டனம் செய்கிறார்.

சமயவாதிகளால் பின்னப்பட்ட சமய வலையில் உபாயமாக கற்பிக்கப்பட்ட வார்த்தை தான் 'கடவுள்' என்னும் மாயாஜால வார்த்தை. இந்தக் கடவுள் பற்றி சமயவாதிகளால் புனையப்பட்டக் கதைகள் அனைத்தும் பொய்யே. இவர்கள் கூறும் கடவுள் இலட்சணத்தைக் கொண்டு இவர்களால் கடவுளை நிரூபிக்க முடியுமா? அவர்கள் கூறும் கதைகளனைத்தும் பொய், கற்பனை. ஆகவே இந்தக் கற்பனையில் கட்டுவிக்கப்பட்ட ஒரு மாயாஜால வார்த்தைதான் கடவுள். இவர்கள் கூறுவது போல் கைலயங்கிரியிலோ வைகுந்தத்திலோ சுவர்க்கத்திலோ கடவுள் வீற்றிருக்கவில்லை. இவர்கள் கூறுவது போல் இந்த மாயாஜாலக் கடவுளை வணங்காதவர்களை அவர் கொல்வாரென்றும் அதற்கு சூலாயுதமும், வேலாயுதமும், சக்ராயுதமும் வைத்திருக்கிறார் என்று சொல்லுவது பொய். இவர்கள் சொல்லுவது போல் சுரர்களையோ, அசுரர்களையோ கொல்லவில்லை. இவைகள் அனைத்தும் கற்பனையாகக் கூறப்பட்டவைகளே. இது பற்றிப் பேசும் வேதம் ஆகமம் இதிகாசம் புராணங்கள் மற்றனைத்து சமய சாஸ்த்திரங்களும் கற்பனையே - பொய்யே. இவைகளை இயற்றி மனிதர்களின் மனதை மயக்கி மருளச் செய்த வேதவியாசரை வள்ளற் பெருமான் குறிப்பிடும் பொழுது 'வல்லான் ஒருவன் பூட்டிய பூட்டைத் திறக்க இதுவரை ஒருவரும் வந்தபாடில்லை' எனக்குறிப்பிடுகிறார். ஆக வேத வியாசர் பூட்டிய பூட்டை வள்ளற் பெருமான் உடைத்தார்

ஆன்ம ஞானம் பற்றி வள்ளற் பெருமான் கூறும்போது அனைத்திற்கும் ஆதாரமாகவுள்ளது ஸத் பொருளே. அதுவே பிரபஞ்சமாகவும் பஞ்ச பூதங்களாகவும் நட்சத்திர சூர்யர்களாகவும் கிரகங்களாகவும், கிரகங்களில் தோன்றிய தாவரங்களாகவும் மற்றுமுள்ள ஜீவராசிகளாகவும் பறவைகளாகவும் மற்றுமுள்ள அனைத்துமாகவும் தோன்றிக் காட்சியளிக்கிறது. ஸத் பொர்ருள் வேறு தோன்றிய அனைத்தும் வேறு என்பது பிழை. அந்தச் சத்பொருளே இவ்வாறாகத் தோன்றிக் காட்சியளிக்கிறது. இவைகளை வேறு வேறாகப் பார்ப்பது அஞ்ஞானம். ஏகமாகவுள்ளது ஸத் பொருள் மட்டுமே. இதனை அறிவதே

Koviloor Digital Library

சத்மார்க்கமாகும். இது பற்றிய விளக்கம் அண்ட பிண்ட இரகசியத்தில் கூறப்பட்டுள்ளது. அதுவே தான் சன்மார்க்கமென்று அழைக்கப்படுகிறது. இதற்கு ஆதாரமாக அருட்பெருஞ்ஜோதி அகவலில் கூறப்படுவதாவது. 'இகநிலைப் பொருளாய் பரநிலைப் பொருளாய் அகமறப் பொருந்திய அருட்பெருஞ்ஜோதி' 'தானொரு தானாய் தானே தானாய் ஊனுயிர் விளங்கும் ஒரு தனிப்பொருளே' அதனையே அருட்பெருஞ்ஜோதியென்றும் வள்ளற்பெருமான் அழைக்கிறார். மானிடன் உடலாகிய ரூபமாகவும்; உயிராகிய அருபமாகவும் இவைகளுக்கு ஆதாரமாகிய சொரூபமாகவும் உள்ளான். ரூப அரூப சொரூப எனும் மூன்றுமாகவுள்ளது ஏகமாகிய ஸத் பொருள் ஒன்றே. மனிதன் தன்னைச் சத் பொருளென்று அறியாது, சமயவாதிகளின் பொய்ப்பிரச்சாரத்தால் வெளியில் ஸத்பொருளைத் தேடுகிறான். சமயவாதிகள் உள் நோக்கத்தோடு திட்டமிட்டு இந்த ஸத் ஞானமாகிய சத்தியத்தை மறைத்துவிட்டார்கள். அவர்களது சாஸ்திரங்களை உபாயமாகக் கையாண்டு மனிதர்களின் மெய்ஞான அறிவை சிதைத்து விட்டார்கள். அழித்துவிட்டார்கள். எது போலென்றால் வேடன் வீட்டில் வளர்ந்த அரச குமாரன், அவன் தன்னைப்பற்றி உண்மையையறியாமல் தான் வேடனென்று நினைப்பது போல. ஆகவே சமயவாதிகள் கூறும் மாயாஜால, வார்த்தையாகிய கடவுள் எனும் வார்த்தை கற்பிதமே-பொய்யே-புனைசுருட்டே ஆகவே கடவுள் என்று சொல்லுவது மெய்ஞானத்திற்கு ஏற்புடையது அல்ல. மெய்ஞானங் கூறுவது. சத்பொருள்-மெய்ப்பொருள்-செம்பொருள்-பரம்பொருள் ஆகும். இதனை மறைப்பதற்கே சமயவாதிகளால் புனையப்பட்ட வார்த்தையே கடவுள் எனும் வார்த்தை. ஆகவே கடவுள் என்பது மாயாஜால வார்த்தையாகும். இந்தச் சமயவாதிகள் பூட்டிய பூட்டைத் தான் வள்ளற் பெருமான் உடைத்தார்.

மேற்கண்டதற்கு ஆதாரமாக பிருகுதாரண்ய கோபநிஷத்தில் (1-4-10). 'தனக்கு அந்நியமாக தேவதையுண்டு என்று உபாசிப்பவன் அறியாதவன். இவன் தேவர்களுக்கு (சமயவாதிகளுக்கு) பசுப்போன்றவன்' எனக் கூறப்படுகிறது. சமயவாதிகள் கூறுவது போல கடவுள் எங்கோ வீற்றிருக்கிறார் என்பதை நம்பி ஸ்தலங்களுக்கும், தீர்த்தங்களுக்கும் சென்று தேடுபவன் அறியாதவன் - முட்டாள். இவனை

சமயவாதிகள் மாடாகப் பாவித்து மாட்டிலிருந்து பால் கறப்பது போல் நைவேத்தியம் தக்ஷிணை தானம் போன்றவற்றைப் பெறுகிறார்கள். உண்மையறியாது இப்படிச் செய்யும் மானிடனை மாடு என்று உபநிஷதம் கூறுகிறது. மேற்கண்ட கருத்தை உறுதி செய்வதே பாதராயணர் இயற்றிய "நியாப்பிரஸ்தானா" என்ற பிரம்ம சூத்திரமாகும்.

சத்மார்க்கமாகிய ஆன்மஞானம் மக்களால் அறியப்பட்டு அனுஷ்டிக்கப்படுமானால் அனைத்து சமயங்கள் மற்றும் சடங்காச்சாரங்கள் அனைத்தும் ஒழிந்துவிடும். ஆனால் சமயவாதிகளாகிய மடாதிபதிகளும் சந்நிதானங்களும் புரோகிதர்களும் சத்மார்க்கமாகிய ஆன்ம ஞானத்தை அறிய விடாது தடை செய்து திட்டமிட்டுப் பொய்ப் போதனைகளாகிய வேதம் ஆகமம் இதிகாச புராணங்கள் மற்றும் ஜோதிஷங்கள் உண்மையென்று கூறி மக்களைத் திசைத்திருப்பிவிட முயற்சிக்கிறார்கள். இந்த வேத ஆகம இதிகாச புராணங்கள் மற்றும் ஜோதிஷங்களால் மக்களுக்கு ஒரு பயனும் இல்லை என வள்ளற்பெருமான் கூறுகிறார். இவைகளை விட்டுவிட வேண்டுமெனவும் கூறுகிறார். முண்டோ கோபஷதம், சாங்தோக்கிய உபநிஷதம், பிரம்ம சூத்திரம் ஆகியவை இவைகளைக் கீழானவைகள் என்றும் ஆன்ம ஞானத்தைக் கொடுக்காதென்றும், மாறாக ஆன்ம ஞானத்தை அறியவிடாமல் தடை செய்யுமெனவும் கூறுகின்றன.

உலகிலுள்ள அனைத்துச் சமயவாதிகளும் பரம்பொருளுக்குப் பெயர் சூட்டுகிறார்கள். பரம்பொருளுக்கு சிவன் என்றும் நாராயணன் என்றும் பல்வேறு நாமங்களைச் சூட்டுகின்றனர். இஃது எதுபோலென்றால் தந்தைக்கு மகன் பெயர் சூட்டுதல் போலுள்ளது. நாம ரூப குண தோசமற்ற பரம்பொருளை பெயர் சூட்டி அழைப்பது கற்பனை. எல்லாவற்றிற்கும் ஆதாரமாயுள்ள பரம்பொருள் அனைத்து ஜீவராசிகளுக்கும் தந்தை போன்றவர். இதிகாச புராணங்கள் மற்றுமுள்ள சாஸ்திரங்கள் எங்கெல்லாம் பரம்பொருளுக்குப் பெயர் சூட்டுகின்றதோ அங்கெல்லாம் சத்தியத்திற்கும் நியதிக்கும் எதிராகப் பேசப்படுகிறது. அதனைப் பரம்பொருள் - சத்பொருள் - செம்பொருள் - மெய்ப்பொருள் என்றுதான் கூற வேண்டும். கற்பனையான நாமங்கள் சூட்டப்பட்டதால் இதிகாச புராணங்கள் மற்றுமுள்ள சமயசாஸ்திரங்கள் அனைத்தும் கற்பனை என்பதை அறிய வேண்டும். சமயவாதிகள் கற்பனையான

Koviloor Digital Library

ஆண் கடவுள் பெண் கடவுளுக்கு (விக்கிரகங்களுக்கு) தாலிகட்டித் திருமணம் செய்வித்து, பள்ளியறையில் படுக்கவைத்து இரவு முழுவதும் பூட்டி வைக்கும் சடங்காச்சாரங்களைச் செய்கின்றனர். ஐயஹோ! இந்தப்புளுகு மூட்டைப்புராணக் கதையை யாரிடம் சென்று கூறுவது?

கடவுள் வேறு மனிதன் வேறு பிரபஞ்சம் வேறு என்று பேசக்கூடிய சைவம் முதலான சமயங்களனைத்தும் மக்களை சத்பொருள் ஞானத்தையறிய விடாது தடைசெய்கிறது. அதிலுள்ள சமயவாதிகள் பிழைக்கும் வழி தடை படாமலிருக்க பெரும் பாவத்தைச் செய்கிறார்கள். அவர்கள் உள்நோக்கத்தோடு கடவுள் சிந்தனையாகிய கற்பனையை உண்மை போல பேசி ஏமாற்றி மனிதனை நம்பவைத்து மக்களின் செல்வத்தை அபகரிக்கவே முயல்கின்றனர். அபகரித்துக் கொண்டுமிருக்கின்றனர். இவர்களது இந்தப் பொய்யான சமயங்களை எதிர்ப்பவர்களையும் இவர்களது சமயத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களையும் சமயங்களிலுள்ள கடவுள் கொன்றுவிடும் என்றும் கூறுகிறது. சமயங்கள் தோன்றிய காலத்திலிருந்து 100 கோடி மானிடர்களுக்கும் மேற்பட்டவர்களை மனித நேயமின்றி ஈவு இரக்கமின்றி கொடூரமாகக் கொன்று குவித்து மகிழ்ந்தனர். கொன்று கொண்டுள்ளனர். எதிர் காலத்திலும் கொல்லுவார்கள். இதற்கு உலக வரலாறு இந்திய வரலாறு சாட்சியாகும். இவர்களுக்கு இந்தக் கொடூரமான கட்டளைகளையிட்டது, இவர்களின் சமய சாஸ்திரங்களே. கொன்றபின் அவர்கள் செல்வத்தைக் கொள்ளையடிக்கவும் கட்டளையிட்டுள்ளது. மேலும் இப்படிக் கொல்லப்பட்டவர்களின் குடும்பத்திலுள்ள இளம்பெண்களை அடிமைப்படுத்தி வைப்பாட்டிகளாக வைத்துக் கொள்ளவும் ஆணையிட்டுள்ளது. இவர்களது சமய சாஸ்திரங்களின்படி பிற மதத்தவரைக் கொன்றால் இறைவன் இவர்களுக்கு சொர்க்கத்தில் இடங்கொடுப்பதோடு கன்னிப்பெண்கள் இவர்களுக்குத் திருமணம் செய்து வைக்கப்படுவர் என்றும் பொய்யான வாக்குறுதிகளை இவர்களது கொடூரமான சாஸ்திரங்கள் உறுதி கூறுகிறது. இதனை நம்பிய சமயவாதிகள் இவைகளை கடவுள் கட்டளை எனக்கூறி பிற சமயத்தவரை கொடூரமாகக் கொன்று குவிக்கின்றனர்.

'அனைத்துச் சமயங்களும் கடவுள் வேறு மனிதன் வேறு என்று கூறுகின்றன. சொர்க்கம் நரகம் உண்டு என்று கூறுகின்றன. ஆகவே

Koviloor Digital Library

அனைத்துச் சமயங்களும் பொய்யானது பிழைபட்டது என்று பிரம்ம சூத்திரம் கூறி நிராகரிக்கிறது. - பிரம்ம சூத்திரம் அத்தியாயம்-2

மேற்கண்டவைகள் பற்றி விவேகானந்தர் கூறும் விளக்கம்

1. சுவாமி விவேகானந்தர் தமது அமெரிக்கப் பிரசங்கங்களில் God did not Create men But Men Created God எனக்கூறுகிறார். அதன் பொருள் 'கடவுள் மனிதனைப் படைக்கவில்லை. ஆனால் மனிதனே கடவுளைப் படைத்தான்' என்பதாகும். சைவ சமயம் தனுகரண புவ போகங்களைக் கொடுத்து மனிதனைக் கடவுள் படைத்தான் என்று கூறுகிறது. இது பெரும் பொய் மோசடி. இது சமய வாதிகளின் சூது.

2. சுவாமி விவேகானந்தர் மேலும் கூறுவது :

கடவுளின் விக்கிரக வழிபாடு இருக்கும் இடங்களிலெல்லாம் புரோகிதர்களின் கொடுமை இருந்து கொண்டேதானிருக்கிறது. புரோகிரதர்களின் கொடுமையை ஒழிக்க வேண்டுமானால் உருவக் கடவுள் வழிபாடு அனுஷ்டானங்களை ஒழிப்பதன் மூலம் தான் அது முடியும்.

3. 'குள்ள நரியின் கொடுமை சிங்கத்தின் கொடுமையை விடத் தீவிரமானது. சிங்கம் ஓர் அறை அறைந்துவிட்டுப் பிறகு சும்மா இருந்து விடுகிறது. ஆனால் குள்ள நரியோ தான் கொல்லவிரும்பும் பிராணியைக் கொஞ்சங் கொஞ்சமாக விடாமல் தொடர்ந்து சென்று சமயம் கிடைக்கும் போதெல்லாம் கடித்துத் சித்ரவதை செய்கிறது. புரோகிதத் தொழிலில் இயற்கையாகவே கொடுமையும் இரக்கமற்ற தன்மையும் கலந்தே இருக்கின்றன. புரோகிதர்களின் ஆதிக்கம் உயரும் போது சமயம் குன்றிவிடுவதற்கு இது தான் காரணம்.

ஞானதீபம் Vol- 5 பக்கம் 33 மற்றும் 198
திருத்திய இரண்டாம் பதிப்பு 2m - 2 - 1986
ஞானதீபம் Vol - 3 பக்கம் 412 பாரா 2
ஞானதீபம் Vol-5 பக்கம் 372, 373

Koviloor Digital Library

சித்தர் பாடல் : 1

நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புஷ்பஞ்சாத்தியே
சுற்றிவந்து மொன மொனன்று சொல்லுமந்திர மேதடா

நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ.

பாடல் : 2

இருக்குமிடத்தை (இதயக்கமலம்-சிற்றம்பலம்) விட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகிறார் ஞானத்தங்கமே இவர் (சமய வாதிகள்) ஏதுமறியாரடி ஞானத்தங்கமே (எங்கெங்கோ-கோயில், குளம்)

விளக்கம் :

தனது இதயகமலத்திலுள்ள சத்பொருளை விடுத்து கோயில், குளம் முதலியவைகளில் சமயவாதிகள் சத்பொருளைத் தேடி அலைகின்றனர். இவர்கள் அறியாதவர்கள் அஞ்ஞானிகள்

பரிகாரம் :

பரிகாரம் என்ற பெயரில் பணத்தைப் பிடுங்கிக் கொண்டு மக்களை மடையர்களாக்கி பிழைப்பு நடத்துபவர்களாகவே இந்தப் புரோகிதர்களும் ஜோதிடர்களும் தங்களை விருத்தி செய்து கொண்டுள்ளனர். மானிடர்களின் மனதைப் பலஹீனப்படுத்தி பிழைப்பு நடத்துகின்றனர்.

வைணவ சம்பிரதாயம்

வைணவ சம்பிரதாயத்திற்கு ஆதாரமாக சாண்டில்யர் இயற்றிய பாஞ்சராத்திர பிரகரணம் ஆதாரமாகக் கூறப்படுகிறது. இதன் விளக்கமே பாகவதம். பகவான் வாசு தேவன் சங்கர்சனனாகவும் பிரத்யுமனனாகவும் அநிர்ருத்தனனாகவும் தோன்றியுள்ளது. அதாவது மகா விஷ்ணுவிலிருந்தே வாசுதேவனும், வாசு தேவனிலிருந்து சங்கர்சனனும், சங்கர்சனனிலிருந்து பிரத்யுமனனும், பிரத்தியுமனனிலிருந்து அநிருத்ரனனும் தோன்றினர் என்பதாகும். இந்த நிலையில் வாசுதேவனை சடங்காச்சாரத்துடன் பூஜித்து நாமபஜனை செய்தால் வைகுந்த பதவி எனும் மோட்சம் கிடைக்கும் என வைணவம் கூறுகிறது.

Koviloor Digital Library

தோற்றுவிக்கப்பட்ட அநித்திய வஸ்துவாகிய சங்கர்சனன் நித்திய வஸ்துவிற்குத் பூஜை செய்து நாம பஜனை செய்தால் நித்திய சூரியாகி நித்திய வஸ்துவாகி மகாவிஷ்ணுவின் பாதாரவிந்தத்தில் என்றென்றும் வீற்றிருக்கும் எனக் கூறுகிறது. சங்கர்சனன் என்ற ஜீவன் தோற்றுவிக்கப்பட்டது என்று கூறுகிறது. எதற்கு ஆதியுண்டோ அதற்கு அந்த முண்டு. இது தத்துவம். இதையறியாது சங்கர்சனன் நித்திய வஸ்துவாகி விடுவான் என்று சொல்லுவது பிழை.

வைணவ சம்பிரதாயம் மகாவிஷ்ணு சங்கர்சனன் பிரத்தியுமன் அநிருத்திரன் ஜீவன் மனம் அகங்காரம் இவையனைத்தும் நாராயணன் என்றே கூறுகிறது. அனைத்தும் நாராணனாக இருக்கும் போது அவைகளுக்குள் யார் பெரியவன் என்ற போட்டி ஏற்படும்.

அப்படியிருக்கும் போது ஜீவன் நாம ஜெபம் செய்வது பூஜை செய்வது என்பது எதற்காக? இவையாவும் வைணவ சம்பிரதாயத்திலுள்ள சய முரண்டாடுகளே.

சாந்தோக்கிய உபநிஷதம் 7.1 கூறுவது விஷ்ணுவின் விக்ரகத்தைப் பார்த்து விஷ்ணு, விஷ்ணு என்று எத்தனை முறை கூறினாலும் ஒன்றும் ஏற்பட போவதில்லை. பிரம்மசூத்திரம் அத்தியாயம் 2-2-8 கூறுவது பாகவதம் பிழைப்பட்டது என்று நிருபிக்கப்பட்டதால் பாகவதம் நிராகரிக்கப்படுகிறது. இது ஆன்ம ஞானத்தை அறியவில்லை என்று கூறுகிறது.

வைணவர்கள் இராமனையும் கிருஷ்ணனையும் நாராயணின் அவதாரங்கள் எனக்குறிப்பிடுகின்றனர். இவர்களைத் தெய்வமாகவும் பூஜிக்கின்றனர். இராமன் அனுமனுக்கு உபதேசித்த முக்திகோபநிஷத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். அதாவது அனுமன் இராமனிடம் முக்தி வேண்டுகிறார். அதற்கு இராமன் அனுமனை நோக்கி மாண்டூக்ய உபநிஷதம் ஒன்றை மட்டுமே படிக்கவும். மற்றவைகளை விட்டுவிடவும் எனப் போதிக்கிறார்.

மாண்டூக்கியம் கூறும் மகா வாக்கியம் :

'அயாத்ம பிரம்ம' ஜீவன் எனக் கூறப்படும் ஆத்மா சத் பொருளே. ஆகவே சத்பொருளாகிய அனுமனுக்கு முக்தி என்பது கற்பிதம். முக்தி சொருபமாக இருந்து கொண்டிருப்பதுவே அனுமன்

Koviloor Digital Library

தானே! அவ்வாறிருக்கும் பொழுது கற்பிதமான முக்தியை வேண்டுவது அறியாமையே! இங்கு சாண்டில்யரின் பாஞ்சராத்திர ஆகமச் சிந்தனைகள் நாராயணின் அவதாரமாகிய இராமனாலேயே நிராகரிக்கப்படுகிறது. பாஞ்ராத்திர ஆகமத்தை நிராகரித்த இராமனை இவர்கள் எவ்வாறு தெய்வமாகப் பூஜிக்கிறார்கள் என்பது தெரியவில்லை. இது வைணவர்களின் அறியாமையை வெளிப்படுத்துகிறது. ஆகவே பாஞ்ராத்திர ஆகமம் நிராகரிக்கப்படுகிறது.

கிருஷ்ணன் பகவத்கீதையை அருளிச் செய்ததாகப் பேசப்படுகிறது. பகவத் கீதையில் ஜீவனாகிய ஆத்மா நித்திய வஸ்து என்று கூறுகிறது. அஃது உற்பத்தி செய்யப்பட்டது அல்லவென்றும் கூறப்படுகிறது. ஆதியந்தமற்றதென்றும் கூறப்படுகிறது. அப்படிப்பட்ட ஜீவனாகிய ஆத்மாவை சாண்டில்யர் இயற்றிய பாஞ்ராத்திர ஆகமத்தில் நாராயணன் நான்கு வியூகங்களைப் படைத்தாரென்றும் கூறுப்படுகிறது. அதாவது மகாவிஷ்ணு, சங்கர்சனன் பிரத்தியுமன் மற்றும் அநிர்ருத்திரன் ஆகும். அவைகளில் ஜீவனாகிய ஆத்மாவை சங்கர்சனன் எனும் பெயரில் படைக்கப் பட்டதாகப் பேசப்படுகிறது. ஆகவே பாஞ்சராத்திர ஆகமத்தில் கூறப்பட்ட ஜீவனாகிய ஆத்மா படைக்கப்பட்டது எனும் கருத்தை கிருஷ்ணன் மறுக்கிறார். இதிலிருந்து அறியப்படுவது. சாண்டில்யரின் பாஞ்சராத்திர ஆகமம் நாராயணன் அவதாரம் என்று கூறப்பட்ட கிருஷ்ணனால் மறுக்கப்பட்டு நிராகரிக்கப்படுகிறது. ஆகவே பாஞ்ராத்திர ஆகமம் நிராகரிக்கத் தக்கதே.

ஆகவே தான் வள்ளற் பெருமான் 'சாதியும் மதமும் சமயமும் பொய்யென ஆதியிலுணர்த்திய அருட்பெருஞ்ஜோதி' என அகவலில் கூறினார்கள். தமது பேருபதேசத்தில் பொய்யான சைவ வைணவ சமயங்களை விட்டு விடும்படி போதித்தருளினார்கள்.

அகவல் கூறுவதாகவது :

'ஒன்றெென இரண்டென ஒன்றிரண்டென அவை அன்றென விளங்கிய அருட்பெருஞ்ஜோதி'

சைவம் முதலிய சமயங்கள் கடவுள் வேறு மனிதன் வேறு என்று கூறுகிறது. இது துவைதமாகும். வைணவ சமயமும்,

Koviloor Digital Library

மகாவிஷ்ணுவுலிருந்து சங்கர்ஷனன் என்ற ஜீவன் தோன்றியதாகக் கூறுகிறது. அதாவது வஸிஸ்டாத்வைதத்தைப் போதிக்கிறது. இவைகள் உண்மையல்ல. கற்பிதமென்று வள்ளற்பெருமான் நிராகரிக்கிறார். பரம்பொருளும், பிரபஞ்சமும் வேறுவேறன்று. அவைகள் ஒன்றுதான் என்றும் அத்வைதமென்றும், ஏகம் ஒருமை என்றும் குறிப்பிடுகிறார். அதுவே "சன்மார்க்கமென்றும்" கூறுகிறார்.

4. யோகம்

யோகம் என்பது என்ன?

யோகம் என்பது பிரணாயாமம், ஆசனம், தியானம், சமாதி என்ற நான்கு பதங்களையுடையது. இதன் மூலம் காயசித்தியடைவதற்கு காயகற்பம் குண்டலினி யோகம், தவம் முதலியனப் பேசப்படுகிறது. அதில் தியானம் செய்யும் பொழுது மனம் கட்டுப்படும். மனம் தனக்கு அந்நியமான ஒரு பொருளையே சிந்தித்துக் கொண்டிருக்கும். தியானம் முடிந்தவுடன் மனம் அகண்டாகாரத்தில் தறிகெட்டு ஓடி அலைபாயும், யோகத்தால் நிரந்தரமாக மனதைக் கட்டுப்படுத்த முடியாது. தான் அந்த சத்பொருள் என்பதை அறிந்து பரஞானம் ஏற்பட்டுத் தனக்கு அந்நியமாக ஏதுமில்லை என்ற நிலை ஏற்படும் பொழுது தியானம் செய்ய வேண்டுமென்ற அவசியம் ஏற்படாது. அந்த ஞானத்தில் மனமடங்கி ஆன்மாவில் இலயித்துவிடும். அதனால் மனமொடுங்கி செயலற்றுப் போகும். ஆன்ம ஞானத்தால் இந்த நிலை ஏற்படும் பொழுது, தியானம் என்பது பயனற்றுப் போகும். மனம் தான் ஞானசொரூப நிலையையறிந்து சாட்சாத் காரம் எய்தும். அதாவது மனம் இல்லாது போய்விடும்.

யோகத்திற்கு ஆசான் பதஞ்சலி. பதஞ்சலிக்கு குரு சாங்கியம் இயற்றிய கபிலர். இவர்களின் கருத்து பிரகிருதி எனும் மாயையிலிருந்து தோன்றியது மகத் என்பதாகும். இந்த மகத்தையே அறிவு என்றும் பிரபஞ்சமனம் என்றும் பேசப்படுகிறது. அதாவது இவை தூலப் பொருளின் சூட்சும நிலையாகும். இஃது அழியக்கூடியது - அநித்தியமானது - நிலையில்லாதது - மாயையின் வெளிப்பாடு. இதுவே பிரபஞ்ச சிருஷ்டிக்கு முக்கியமாகிறது.

இந்த மகத் என்ற அறிவின் வெளித் தோற்றமே ஆகாசமும்

Koviloor Digital Library

பிராணனும். இந்தப் பிராணனையே உயிர் என்றும் ஆங்கிலத்தில் life என்றும் பேசப்படுகிறது. இதுவே உயிர்களின் உணர்வுக்கும் இயக்கத்திற்கும் காரணமாகவுள்ளது. இதனை உயிராற்றல் என்று குறிப்பிடுவது சரியாகும். ஆகாசமென்பது இயக்கமற்ற சூட்சுமமான ஜடத்தன்மை கொண்டது. இந்த ஆகாயத்தின் மீது உயிராற்றலாகிய பிராணன் அதிர்வுகளை உண்டாக்கும்பொழுது தேஜஸ் என்ற ஒளி உஷ்ணம் தோன்றுகிறது. இவைகளின் இயல்பு அணுவைவிடவும் மிக நுட்பமானது. இதன் வெளித்தோற்றந்தான் வாயுக்கள். அதில் ஒன்று காற்று மற்றும் ஹைட்ரஜன், நைட்ரஜன், ஹீலியம் போன்ற வாயுக்களும் உள்ளன. இந்த வாயு நிலையை அடையும் பொழுது அனுத்தன்மை பெறுகிறது. இதிலிருந்தே திரவம் உற்பத்தியாகிறது. திரவத்தில் பல உண்டு. அதிலொன்றே நீர், அந்த நீர் H_2O ஆகும். அஃதாவது இரண்டு ஹைட்ரஜன் அணுக்களும் ஒரு ஆக்ஸிசன் அணுவும் சேர்ந்து இராசாயனமாறுதல்களுக்குட்பட்டு நீர்த் திவளைகளாக மாறுகிறது. இதன் பெருக்கத்தையே நீரென்றும், தண்ணீரென்றும் கூறுகிறோம்.

நீர் போன்ற பல திரவப் பொருள்கள் இணைந்து புதுவிதமான பல திடப்பொருள்களை உற்பத்தி செய்கிறது. இந்தத் திடப் பொருளே கிரகங்கள், விண்கற்கள் போன்ற பல பொருட்களாக மாறுகின்றன. அந்த கிரகங்களில் ஒன்றே பூமி, இந்த பஞ்ச பூதங்களின் கூட்டுச் சேர்க்கையால் இரசாயான மாறுதல்களாகவும் உயிர்த்தன்மை பெற்ற தாவரங்களாகவும், நுண் கிருமிகள், புழு பூச்சி போன்ற ஜீவராசிகளுமாகும். இவைகளையே ஊர்வன, பறப்பன, நடப்பன என்று பேசப்படுகிறது. அதிலொன்றே மனிதன், இது பற்றிய தெளிவான விளக்கம் அண்டபிண்ட இரகசியத்தில் பேசப்பட்டுள்ளதைக் காண்க. இப்படிப்பட்டவைகளை தோன்றி இருந்து மறைவன அதாவது ரூப அரூபம் - அதாவது ஜடப்பொருளின் சூட்சுமத் தன்மையும் திடத்தன்மையுமாகும். இவைகளையே அநித்தியமென்று பேசப்படுகிறது. அதாவது பிரகிருதி என்ற மாயை முதல் மனிதனுடைய உடல், உயிர், உள்ளம் வரை அநித்தியம் - தோன்றி மறைவது நிலையில்லாதது. காலதேசவர்த்தமானத்திற்குக் கட்டுப்பட்டது. இதிலொன்றுதான் "அறிவு". இந்த அறிவு ஜடத்தன்மையுள்ளது. அதாவது, அழிந்து போகக் கூடியது, அநித்தியமானது, நிலையில்லாதது. இந்த அறிவிற்கு "கோயில் கட்டி" அதனை நிலையானது என்று கூறி அதனைப்

Koviloor Digital Library

பற்றிப் பேசுமிடமே "அறிவுத் திருக்கோயில்" என்று சிலர் கூறுகின்றார்கள். இஃது அவர்களின் அறியாமையாகும். கோவிலென்பதே நித்திய வஸ்துவாகிய சத் பொருள் இருக்குமிடத்தையே குறிக்கும். இது பற்றி திருவள்ளுவர் கூறுவதாவது,

நில்லாதவற்றை நிலையின என்றுணரும்
புல்லறிவாண்மை கடை - எனக் கூறுகிறார்

அதாவது நிலையில்லாத பொருளை நித்தியமென்று பேசுபவர் அறிவில் கடைகெட்டவர் என்று கூறுகிறார்.

இது பற்றி பிரம்ம சூத்திரம் விளக்கும்பொழுது யோகம் ஞானத்தைத் தரவல்லது அல்ல என்றும் அது துவைதத்தையே பேசுகிறது என்றும், தியானம் செய்யும் வரை மனம் அடங்குமென்றும் தியானம் நின்ற பின்பு மனம் அலையும் என்றும் கூறுகிறது. இஃது ஒரு நிரந்தரமான நிலையைத் தரவல்லது அல்ல என்றும் போதிக்கிறது.

மெய்ஞானமாகிய அத்வைத ஞானமே, அல்லது ஒருமை ஞானமே நித்திய நிலையைத் தரவல்லது. ஆகவே யோகம் பிழைபட்டது என்று கூறி பிரம்ம சூத்திரம் இரண்டாவது அத்தியாயம் யோகத்தை நிராகரிக்கிறது. தாயுமான சுவாமிகளும் குரு வணக்கத்தில் "துவைதம் சிற்றறிவே" எனக் கூறுகிறார். வள்ளற்பெருமானும் அருட்பெருஞ்ஜோதி அகவலில் இதே கருத்தைப் பகர்ந்துள்ளார்கள். ஆகவே யோகம் பிழைபட்டது என்று நிராகரிக்கப்படுகிறது.

இந்திய அரசியல் சட்டம்

நமது தாய்த்திரு நாடு இந்தியா சுய அரசு உரிமை கொண்ட சமத்துவ மதச் சார்பற்ற ஜனநாயக் குடியரசு. இதில் நீதி சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம் இவை யாவும் இந்திய மக்கள் அனைவருக்கும் பூரணமாயும் சமமாகவும் அனுபவிப்பதற்கு வழிவகை செய்கிறது. ஆனால் இன்றைய இந்தியாவிலோ ஜாதி, மதம், இனம், மொழி, பிராந்தியம் வர்ணீயம் போன்ற பேதங்களை ஆதரித்தும் எதிர்த்தும் பேசியும் அனுஷ்டித்தும் வரப்படுகிறது. இதன் காரணமாக

Koviloor Digital Library

இந்திய அரசியல் சட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பலன்கள் மறுக்கப்பட்டும் சிதைக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருகின்றன.

மேற்கண்டவைகளை விரிவாக ஆய்வு செய்வோம்.

மதங்களின் அடிப்படையில் "மைனாரிட்டி" "மெஜாரிட்டி" என்ற இனம் பிரித்து சலுகைகள் வழங்கப்படுகிறது. ஜாதி, மத, பேதமின்றி சமத்துவமாக நடத்தப்பட வேண்டுமென்று இந்திய அரசியல் சட்டம் முதலில் கூறியுள்ளது. ஆனால் அதற்கு முரணாக மதங்களின் அடிப்படையில் "மைனாரிட்டி" எனும் காரணங்களைக் கூறி சலுகைகள் தொடர்ந்து வழங்கப்படுகிறது. ஜாதி, மத, இன பேதமின்றி அனைவரும் சமம் என்று கூறிய பின்பு அதே அடிப்படையாக வைத்து வேறுபாடுகள் கூறி சலுகைகள் வழங்குவது இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணானதாகும். ஒருவன் இன்று ஒரு மதத்திற்கும் நாளை ஒரு மதத்திற்கும் மாற முடியும். ஆகவே மதம் என்பது இயற்கை உண்மையில்லை. ஆரோகணித்துக் கொள்ளப்பட்டது. செயற்கையானது.

ஜாதி

மனிதன் மனித ஜாதிகளைக் கற்பித்துள்ளான். இஃது உண்மையில்லை. மனிதனுடைய இரத்த வகைகளை (Blood Groups) குரோமோஸோம், ஜீன், ஸ்பீஸிஸ் DNA முதலியவைகளை ஆய்வு செய்யும் பொழுது அதில் ஜாதி பேதங்கள் ஏதும் காணப்படவில்லை. அதில் காணப்படும் உண்மை - மனித இனம் ஒன்றுதான் என்பதாகும். மேலெழுந்தவாறு சோதனை செய்தால் ஆண் ஜாதி, பெண் ஜாதி இரண்டு மட்டுமேயுள்ளன எனும் உண்மை விஞ்ஞானப் பூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

வள்ளற்பெருமான், அகவலில் "ஜாதியும் மதமும் சமயமும் பொய்யென ஆதியிலுணர்த்திய அருட்பெருஞ்ஜோதி" என்கிறார். சன்மார்க்கம் பூசல் கொண்ட ஜாதிகளையும், சமயங்களையும் நிராகரிக்கிறது.

"ஜாதி நீதி குலகோத்திர தூரகம்" - ஆதிசங்கரர்

Koviloor Digital Library

ஜாதி, மதம், குலம் கோத்ரமெல்லாம் மனிதன் மீது கற்பிதமாக ஏற்றிவைக்கப்பட்ட பொய்யாகுமென வேதாந்தம் கூறுகிறது. சுவாமி விவேகானந்தரும் தாழ்த்தப்பட்ட மக்களை "சக்கிலியன்" என்று கூறாதே. அவன் இரத்தமும் (மேல் ஜாதிக்காரன் இரத்தமும்) உன் இரத்தமும் ஒன்றேயாகும். ஆகவே அவன் உன் சகோதரன் ஆகும் என்கிறார். ஜாதி பேதம் பார்க்காதே என்பதாகும். திருவள்ளுவரும் 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வாச் செய்தொழில் வேற்றுமையான்" என்கிறார். மகான்கள் அனைவருமே ஜாதி என்பது கற்பிதம் பொய், புளுகு, சூது என பல்வேறு வார்த்தைகளில் கண்டிக்கிறார்கள்.

இனம்

தற்போது பொதுவாக ஆரிய இனம், திராவிட இனம் என்று இந்தியாவில் பேசப்படுகிறது. இதே போல் பல நாடுகளிலும் இனப்பாகுபாடு பேசப்பட்டும் அனுஷ்ட்டிக்கப்பட்டும் வருகிறது. மனித வரலாற்றை ஆய்வு செய்யும் பொழுது ஆதிமனிதன் தோன்றி சுமார் 50 இலட்சம் ஆண்டுகள் ஆவதாக மதுரை காமராஜர் பல்கலைக்கழக ஆய்வுக் குறிப்பொன்று கூறுகிறது. இந்த வாதம் சரியென்று எடுத்துக் கொண்டு ஒரு தலைமுறைக்கு சுமார் 30 ஆண்டுகள் என்று கணக்கிட்டால் 1,66,666 லட்சம் தலைமுறை ஆகிறது. அதாவது நமக்கு அத்தனை தாத்தாக்கள் இருந்திருப்பதாகிறது. இந்தக் காலக்கட்டத்தில் பூமியில் பிரளயம் ஏற்பட்டு கடலில் எத்தனை முறை மூழ்கி பூமி வெளி வந்தது என்பதை யாரும் அறிந்திலர். மக்கள் எங்கெல்லாம் வாழ்ந்தார்கள், பிரளய காலத்தில் எங்கெல்லாம் ஓடிக் குடியேறினார்கள் என்பது நமக்குத் தெரியாது. இந்த நிலையில் நமது முதல் தாத்தா இந்த பூமியில் எந்த நாட்டில் பிறந்தார் என்ன மொழி பேசினார்? என்ன ஜாதி? என்ன இனம்? என்ன குலம்? என்ன கோத்திரம்?, என்ன மதம்? என்று பகுத்தறிவு வாதிகளால் கூற முடியுமா? இது மிகவும் கடுமையான கேள்வி. பதில் இல்லையென்றுதான் வரும்.

திராவிடர்கள் என்பவர்கள் கட்டையாக, கருப்பாக, குட்டையாக, குண்டாக இருப்பார்கள் என்று ஓர் ஆய்வு கூறுகிறது. ஆரியர் என்பவர் நெட்டையாக, நீண்ட மூக்கு சிவப்பு வர்ணம் சுருள் முடியோடு இருப்பார்கள் என்றும் கூறுகிறது. இந்த இலட்சணங்களைக்

Koviloor Digital Library

கொண்டு பார்த்தால் சிவப்பாக இருப்பவரனைவரும் ஆரியர் என்றும், கருப்பாயிருப்பவர் திராவிடர் என்றும் ஆகிறது. இராமனும், கிருஷ்ணனும் கருப்பு, சீதை, பாமா, ருக்குமணி இவர்கள் சிவப்பு. மேற்கண்டபடி இராமனையும், கிருஷ்ணனையும் திராவிடர் என்றும், சீதை, பாமா, ருக்குமணியை ஆரியர் என்றும் வகைப்படுத்தலாமல்லவா?

இவர்களின் கலப்பால் பிறந்த குழந்தைகளை எந்த இனத்தில் சேர்ப்பது? இதிகாசப்படி இராமன் க்ஷத்திரியன், கிருஷ்ணன் ஹம்ஸன் என்ற அசுரனின் தங்கை மகன் என்றும் இதிகாசம் கூறுகிறது. ஆகவே இராமன், கிருஷ்ணன் இவர்களை திராவிடர் என்றோ ஆரியர் என்றோ பேசுவதில் என்ன அறிவு இருக்கிறது? இது பகுத்தறிவு ஆகுமா? இன்றைய இந்தியாவில் இனக்கலப்பற்று ஒருவரேனும் உள்ளார் என்று விஞ்ஞான பூர்வமாகக் கூறமுடியுமா? அல்லது அப்படியொரு நபரைக் காட்ட முடியுமா?. 50 இலட்சம் ஆண்டுகளாக மனிதர்களில் கலப்பு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அப்படியிருக்க விஞ்ஞான பூர்வமாகவும் பகுத்தறிவுப் பூர்வமாகவும் கூறமுடியாத இலட்சணங்களை மனிதர்கள் மீது கற்பனையாக ஏற்றி ஆரியர் திராவிடர் என்று பேசிக் கொண்டிருப்பவர்களை என்னவென்று அழைப்பது. இது பகுத்தறிவிற்குப் பொருந்துமா? இது பற்றிப் பேசுபவர்கள் இருப்பு இல்லாத ஆரிய திராவிட மாயையைப் பற்றிப் பேசுகிறார்கள் என்று தான் கூறவேண்டும்.

"நால்வருணம் ஆசிரமம் ஆசார முதலா
நவின்ற கலைச் சரிதம் எலாம்பிள்ளை விளையாட்டே
மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவாரிலை
நீ விழித்து இது பார்"

என வள்ளற் பெருமான் இராமலிங்க சுவாமி கூறியதைக் கண்டிலரோ?

பிறர் மீதுள்ள உண்மையற்றக் குற்றங்களையே பேசி வருபவர்கள் தங்கள் மீதுள்ள குற்றத்தைச் சிந்தித்துப் பார்ப்பார்களா? வள்ளுவப் பெருமான் குதர்க்கவாதிகளை நோக்கிக் கேட்கிறார்.

ஏதிலார் குற்றம் போல் தன் குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு

Koviloor Digital Library

கற்பனையாகப் பேசும் குதர்க்க வாதிகளால் பதில் கூறமுடியுமா? இவர்களுக்கு வள்ளுவப் பெருமானின் வாக்கு வழிகாட்டியாகவுள்ளது.

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்"

5. நுகர்வுவெறி

அமெரிக்க ஐரோப்பிய மக்கட் தொகை உலக மக்கட் தொகையில் 16 சதங்கொண்டது. இவர்கள் உலகப் பொருட்களில் 80 சதவீதத்தை நுக்ர்கிறார்கள். எஞ்சியுள்ள 84 சதவீத மக்கள் 20 சதவீதப் பொருட்களையே நுகர்கிறார்கள். இஃது அமெரிக்க ஐரோப்பிய வெள்ளைக்கார மக்களின் நுகர்வு வெறியைக் காட்டுகிறது. இஃது இயற்கையின் நியதிக்கு முரணானது. இந்தியாவில் 110 கோடி மக்கள் வாழ்கின்றனர். இதில் 20 சதவீதமக்கள் 80 சதவீதப் பொருள்களை நுகர்கின்றனர். 80 சதவீத மக்கள் 20 சதவீதப் பொருள்களை மட்டுமே நுகர்கின்றனர். இந்திய மக்களில் 20 சதவீத மக்கள் 80 சதவீதப் பொருள்களை நுகர்வது ந கர்வு வெறியே. இந்தப் பிரபஞ்சத்தில் தோற்றுவிக்கப்பட்ட அ னத்துப் பொருட்களும் உலக மக்கள் அனைவருக்கும் உரியதே. இஃது இயற்கையின் நியதி, இந்த இயற்கையின் நியதியை நுகர்வுவெறிகொண்ட மக்கள் மனிதனால் இயற்றப்பட்ட சட்டத்தின் மூலம் மனிதரிடையே வேறுபாட்டையுருவாக்கி, சிலரின் நுகர்வு வெறியைப் பாதுகாக்கவே அரசு சட்டம், இராணுவம், காவல்துறை மற்றும் நீதிமன்றங்களை படைத்துள்ளார்கள். இதனை ஜனநாயகம் என்று கூறிக் கொண்டு, ஜனநாயகத்திற்கு எதிரிடையாகச் செயல்படுகிறார்கள். இது வெகுஜன விரோதமாகும். இதனை யார் செம்மைப்படுத்துவது? இவர்களது நுகர்வு வெறியின் காரணமாக பூமியின் தட்பவெப்பம் பாதிக்கப்பட்டுள்ளது. ஓசோன் மண்டலம் சிதைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக பூவுலகம் முழுவதுமுள்ள அனைத்து மக்களையும் பாதித்துள்ளது. இதன் மூலம் நாமறிவது, மனிதனால் இயற்றப்பட்ட சட்டங்கள் பெரும் மோசடி.

Koviloor Digital Library

இயற்கையின் நியதி சிதைக்கப்பட்டதால் மக்களிடையே வறுமை, பசி, பட்டினி போன்ற துன்பங்களை ஏற்படுத்தியுள்ளது. இதனை ஈஸாவாஸ்ய உபநிஷதம் "ஒரு மனிதன் உயிர் வாழ்வதற்குத் தேவை எவ்வளவோ அவ்வளவு பொருளை மட்டுமே எடுத்துக் கொண்டு மீதமுள்ளவற்றை மற்றவர்களுக்காக விட்டுவிட வேண்டும்" என்கிறது. ஆனால் தற்போது இந்தச் சத்திய போதனை நுகர்வு வெறி கொண்ட சுயநலமிக்க மக்களால் சிதைக்கப்பட்டுள்ளது.

மனிதன் பொது உடைமை, தனி உடைமை பற்றி பேசுகிறான். இது மனிதனால் இயற்றப்பட்ட பிழைபட்ட சட்டமாகும். இயற்கை நியதி அப்படி நிர்ணயிக்கவில்லை. மற்ற ஜீவராசிகளின் உரிமையும் உடமையும் என்னவாயிற்று. Man Made Law is Wrong and Illegal. மனிதனால் இயற்றப்பட்ட சட்டம் பிழைபட்டது. இயற்கை சட்ட விரோதமானது.

இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், ஜீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம் ஆகிய இந்த நான்கு ஒழுக்கங்களையும் முக்கியமாகக் கொண்டுள்ள சன்மார்க்கிகள் மட்டுமே "சத்திய தர்மச் சாலைகளை அமைத்து வறியவர்களுக்கு அன்னம் பாலிக்கின்றனர். அவர்களிடம் இந்த நுகர்வு வெறியில்லை. பங்கிட்டே புசிக்கின்றனர். சன்மார்க்கம் ஒன்றே அறவாழ்வாகும். மற்ற நுகர்வு வெறிகொண்ட வாழ்வு மறவாழ்வாகும். ஆகவே உலகம் உய்ய சன்மார்க்கம் ஒன்றே சிறந்த வழி,

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை - *குறள்*

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே சன்மார்க்கம், சன்மார்க்க வாழ்வு என்பதும் அது தான்.

Koviloor Digital Library

விண்ணப்பம் - 2

இதுவரை தமிழ்நாட்டில் தோன்றிய ஞானிகளுள் வள்ளற்பெருமான் சுவாமி இராமலிங்கம் அவர்களுக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவரும் தோன்றவில்லை என்பது பேருண்மையாகும். அப்படிப்பட்ட ஒப்பற்ற ஞானியாகிய நம் வள்ளற்பெருமான் கடைசியாகப் போதித்தருளிய பேருபதேசத்தில் சத்தியத்தையும் சன்மார்க்கத் தத்துவத்தையும் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்கள்.

அவர் போதித்தது:

இப்பொழுது (22.10.1873 அவரது 50வது வயதில்) என்னுடைய அறிவு அண்டாண்டங்களையும் கடந்திருக்கிறது. நான் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை வைத்திருக்கிறேன். அண்டபிண்ட சொரூப ரூப சுபாவம் என்னவென்று அறியவேண்டும் (சன்மார்க்கத் தத்துவத்தை). இரண்டரை வருடங்களாக நான் சொல்லிக் கொண்டுவந்தேன். இனிச் சொல்லுபவர் சில நாள் தடைபட்டிருப்பார்கள்... இது கடைசி வரர்த்தை, சிவாய நமவென்றும், நமசிவாய என்றும் இது போன்ற வர்ணங்களைச் சேர்த்து ஒன்று இரண்டு மூன்று ஐந்து ஆறு எட்டு பத்து பதின் மூன்று பதினாறு இருபத்தி நான்கு எனும் சங்கையில் வைத்து மந்திரங்களாய் அடைத்து வருவிக்கவிட்டு நடந்து வருகிறது. (தயவு என்ற சொல்லை த-ய-வு என்று சங்கையில் பிரித்து பல பொருள்பட எழுதியும் பேசியும் வருகிறார்கள் இது பிழை என்று வள்ளற்பெருமான் கூறுகிறார்). அம்மந்திரங்களின் அர்த்தம் பலவாக விரியும். ஆதலால், நாம் அடையவேண்டுவது முடிவான ஆன்மலாபமாகிய சிவானுபவமே. (அது நீ என்னும் தத்துவமாகிய காணும் அனைத்தும் ஜீவன்களும் அருட்பெருஞ்ஜோதியென்று அறிந்து அதுவாகயிருத்தல்) அன்றி வேறில்லை. மகாமந்திர வாக்கியத்தை எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம் எனது மெய்யறிவின்கண் அனுபவித்தெழுந்த உண்மை அறிவானு பவானந்தத்தை நீங்கள் எல்லவரும் என் போல் ஐயம் திரிபு மயக்கமின்றி யடைய என்னுள்ளே எழுந்துபொங்கிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைப் பற்றி குறிப்பிட்டேன், குறிப்பிக்கிறேன்,

Koviloor Digital Library

குறிப்பிப்பேன். நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில் நமக்கு முன் சாதனம் கருணையானதினாலே ஆண்டவர் முதற்சாதனமாக “ ”அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி” எனும் திருமந்திரத்தை எடுத்துக் கொண்டார். தயவு கருணை அருள் என்பவை ஒரு பொருளையே குறிக்கும். “சந்ததமும் வேத மொழி யாதொன்று பற்றின் அது தான் வந்து முற்றும்” எனும் பிரமானத்தில் உணர்க (தத்துவமஸி-நீ அருட்பெருஞ்ஜோதி) அயாத்ம பிரம்ம-உனது ஆத்மா அருட்பெருஞ்ஜோதியே, அகம் பிரம்மாஸ்மி - நான் அருட்பெருஞ்ஜோதியே” என்பவை வேத மொழிகளாகும்). இதனை வள்ளற்பெருமான் ஒருமை என்று குறிப்பிடுகிறார். இதனை சத்விசாரம் செய்யவும் அறிவுறுத்துகிறார்.

மேற்கண்ட மகா மந்திரத்தின் பொருள் தெளிவாகவும் விரிவாகவும் அருட்பெருஞ்ஜோதி அகவலில் 1596 வரிகளில் விளக்கப்பட்டுள்ளது. இதனை சத் விசாரம் செய்வது நமது கடமையாகும். சன்மார்க்கத் தத்துவம் அறியாத சிலர் சாதி சமயப் பற்றுக் கொண்டு மேற்கண்ட மகா மந்திரத்தை அழித்து, ஒழிக்கவும், வள்ளற் பெருமானைச் சிறுமைப்படுத்தவும் முரண்பாடாகச் செயல்பட்டு “தயவு” என்ற வார்த்தையை மூன்று எழுத்துக்களாகப் பிரித்து ஒவ்வொரு எழுத்திற்கும் ஒவ்வொரு பொருள் கொண்டு கற்பிதம் செய்து பொருள் கூறியுள்ளார்கள். இது பற்றிய விபரம் இவர்கள் எழுதிய 1. தயவு 2. தயவுப்பெருநெறி என்ற புத்தகங்களில் காண்க. வார்த்தைகளை சங்கைகளாகப் பிரித்துப் பொருள் கூறுவது பிழை என்று வள்ளற்பெருமான் பேருபதேசத்தில் கூறியுள்ளார்கள். மேலும் பெருமான் அவர்கள் பரோபகாரத்தையும் சத்விசாரத்தையும் பின்பற்றுமாறு கூறியுள்ளார்கள். மேற்கண்ட புத்தகங்களில் பரோபகார தயவு மட்டும் பேசி சத்விசாரத்தை மறைக்க முயற்சிக்கிறார்கள். சத்விசார மென்பது அருட்பெருஞ்ஜோதி விசாரமேயாகும். ஜீவர்களிடத்தில் காட்டும் கருணையே தயவு. அருட்பெருஞ்ஜோதி என்று சொல்ல வேண்டிய இடத்தில் தயவு என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். அருட்பெருஞ்ஜோதியின் பொருள் அருள்+பெரிய+ஜோதியாகும், அதாவது ஜோதி என்ற ஈஸ்வரம் கருணையுடனும் அகண்டமாகவும் விளங்கும் பெரும்பதியாகிய பிரம்மத்தைக் குறிக்கும். இதனை விசாரம்

Koviloor Digital Library

செய்து பேரறிவால் அறிய வேண்டும். தயவு என்ற சொல் அருட்பெருஞ்ஜோதி என்ற மகா மந்திரத்தின் பொருளை முழுமையாக வெளிப்படுத்தாது. மாறாக குறைவு படுத்தும், ஆகவே அருட்பெருஞ்ஜோதி என்று கூற வேண்டிய இடத்தில் தயவு என்ற சொல்லைப் பயன்படுத்துவது சன்மார்க்கமாகாது. மகா மந்திரமாகிய அருட்பெருஞ்ஜோதியை மண்ணைப் போட்டு மூடிவிடப் பார்க்கிறார்கள். இது சன்மார்க்கத்திற்கு முரணானது. சன்மார்க்கத்தைக் குழிதோண்டிப் புதைக்க முயற்சிப்பதாகும். சாதி சமய ஒற்றர்கள் சன்மார்க்கத்தையும் மகா மந்திரத்தையும் ஒழித்துவிட முயற்சிக்கிறார்கள். இது நமது வணக்கத்திற்குரிய வள்ளற்பெருமானைச் சிறுமைப்படுத்துவதாகும். சன்மார்க்கிகளே விழித்துக் கொள்ளுங்கள் “பசித்திரு தனித்திரு விழித்திரு” எனும் நம்பெருமான் அவர்களின் ஆப்தர் வாக்கியத்தை நாம் ஒவ்வொருவரும் சிந்தித்துக் கடைபிடிக்க வேண்டுவது நமது கடமையாகும். சாதி சமயப் பற்றுக் கொண்டவர்களால் எழுதப்பட்ட அனைத்துப் புத்தகங்களிலும் சன்மார்க்கத் தத்துவத்தை மறுத்தும் முரண்பட்டும் விளக்கியுள்ளார்கள். இந்த புத்தகங்களை ஆழ்ந்து படித்தால் உண்மை விளங்கும். இவர்களின் பிழைபட்ட புத்தகங்களைப் படிப்பதைத் தவிர்த்து விடுங்கள். இவர்களையும் ஒதுக்கிவிடுங்கள். ஒதுக்க முடியாவிட்டால் இவர்களிடமிருந்து நீங்கள் ஒதுங்கிவிடுங்கள்.

சன்மார்க்க அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்

இந்த நூலைப் படித்த பின்பு மற்ற சன்மார்க்க அன்பர்களுக்கும் வழங்கி படிக்க உதவவும். விருப்பமுள்ள அன்பர்கள் இதனை மறுபதிப்புச் செய்து விநியோகிக்கவும். தயவு செய்து விற்பனை செய்ய வேண்டாம். வள்ளற் பெருமான் போதித்த சன்மார்க்க நெறியில் நிற்கவும்.

அருட்பெருஞ்ஜோதி ! அருட்பெருஞ்ஜோதி !
தனிப்பெருங்கருணை ! அருட்பெருஞ்ஜோதி !

..OOR ANDA...
A. No. 12070
..BRARY, KOVILOOR

Koviloor Digital Library

மனமும் சன்மார்க்கமும் (அறிவின் முடிவு)

1. உணவால் ஆன மனம் சூட்சுமமாய் மனித சரீரத்தில் உள்ளது.
2. மனித மனம் பிரபஞ்சத்திலேயே ஆத்ம சொரூபத்தின் தோற்றத்தில் ஒப்பற்ற 'அதிசய சக்தி'
3. உலகத் தோற்றத்தில் எல்லா உயிர்களுக்கும் அணு விற்கணுவாக மனம் இருப்பினும் மனித மனம் ஆகாயம் போல் அகண்டாகாராமாயுள்ளது.
4. இந்த தேகத்தில் 'நான்' என்று கிளம்புவது எதுவோ அதுவே மனதின் முதல் தோற்றம்.
5. மனிதப் பிறவி இன்ப துன்பங்களை மனதாலேயே அனுபவிக்கிறது.
6. சித்தம் புத்தி அஉறங்காரம் எல்லாம் ஒரே மனமாகிய கரணத்தின் கருவிகளே.
7. மனம் பிராணன் இவைகளின் இருப்பிடம் 'இதயகாசம்' அல்லது சிற்றம்பலம்.
8. ஜீவன் (சூட்சும சரீரம்) மனம் சித்தம் புத்தி 'நான்' என்னும் அஉறங்காரம் பிராணன் இவைகளின் தொகுப்பே தூலப்பொருளின் அரூப நிலை.
9. மனம் 'ஸ்படிகம்' போன்றது. எதிரிலுள்ள நிறத்தையும் ரூபத்தையும் காட்டும்.
10. நல்ல மனம் கெட்ட மனம் என்பது இல்லை. பிறப்பு வாசனையால் மனம் அலையும்.
11. சூட்சுமமாகிய மனதில் பிரதிபலிக்கின்ற இன்ப துன்பங்களை தான் அனுபவிப்பதாக ஜீவன் மாயையால் (மறைப்பினால்) மயங்குகிறது.
12. ஜாக்கிர சொப்பனம் சுசுப்தி எனும் மூன்று அவஸ்தைகளின் தொடர்ந்த அனுபவம் வாழ்க்கை.
13. சுசுப்தியில் மனம் செயல் படாது. ஆத்மசைதன்யத்தின் அதிசய சக்தியால் மனமும் தூங்க வைக்கப்படுகிறது.
14. மனம் ஆத்ம சொரூபத்தின் பிரகாசத்தால் கிளம்பும்போது பஞ்சேந்திரியங்களின் செயலால் உலகம் தோன்றுகிறது.
15. மனதிற்கு உலகம் தோன்றும்பொழுது ஆத்ம சொரூபம் தோன்றாது.
16. ஆழ்ந்த உறக்கத்தில் மனம் இல்லை. ஆகவே உலகம் தோன்றாது.

ஆத்மப் பிரகாசம் தோன்றி இருந்தும் அறிய முடிவதில்லை. சமாதியில் மனம் இல்லை. ஆனாலும் ஆத்மபிரகாசத்தை அறிய முடிகிறது.

17. நித்யமாகவுள்ளது ஆத்ம சொரூபம் ஒன்றே. அநித்தியமாகிய மனம் முதலானவைகள் மாறிக் கொண்டேயிருப்பவை.

18. ஆத்மா நித்தியமான 'சத்' அதன் இலக்கணம் சத்–சித்–ஆனந்தம்.

19. தியான் அப்பியாசத்தால் பிராணனை அடக்கினால் அந்த சமயத்தில் மட்டும் மனம் அடங்கும். தியானம் விடுபட்டவுடன் மீண்டும் மனம் அலையும். மனோலயம் நிரந்தரமாக நிலைப்பதில்லை.

20. 'நான் யார்' என்னும் விசாரணையில் மனம் அடங்கும்.

21. 'நான்' எனும் அஹங்காரம் 'என்னுடையது' (மம ஹாரம்) எனும் நினைப்புத்தான் பந்தம் – பாசம்.

22. உலகம் பொய்யல்ல. அநித்தியம். சதாகாலம் மாறிக் கொண்டிருக்கும்.

23. உலகப் பொருள்களை மனம் நுகரும் சேர்ந்திருக்கவும் சுகம் அற்பம் நிலையில்லாதது.

24. மனம் ஆத்ம லயத்தால் அடையப்படுகிற பேரானந்தத்தையே முடிவில் தேடுகிறது.

25. அஞ்ஞானம் (unknowledge - Not ignorance) (மாயை அல்லது ஆவரணம்) ஆத்மாவாகிய நித்திய வஸ்துவை அறியவிடாது. ஆனால் அநித்திய வஸ்த்துவாகிய நான் தேகம் எனவும் அநித்தியவஸ்துக்களை எனது எனவும் தோற்றுவிக்கும்.

26. மனம் ஞானத்தால் எப்பொழுது ஆத்மாவில் இலயிக்கிறதோ அப்பொழுது சர்வமும் (பிரபஞ்சம் முழுவதும்) 'ஆத்ம சொரூபம்' என்ற நிலை எய்தும்.

27. ஆத்மா–பரம்–ஈஸ்வரம்–சிவம்–பிரம்மம் அருட்பெருஞ்ஜோதி எல்லாம் நித்திய வஸ்து ஒன்றையே குறிக்கிறது.

28. இருந்தபடி இருந்து எண்ணங்களை ஒழித்து நிச்சலமாக இருக்கும் பொழுது 'நான்' என்னும் அவஸ்தை உணர்வற்று அதுவே பேரின்பமாக விளங்கும்.

29. ஆத்ம ஞானம் மனம் எல்லாம் கடந்த் அனுபவம் 'நான்' என்னும் ஆத்மாவே அருட்பெருஞ்ஜோதி எனும் ஞானம் ஏற்படும் பொழுது 'ஆத்ம ஞானம்' தோன்றும். 'நான்' அருட்பெருஞ்ஜோதி என அறிகிறது.

Koviloor Digital Library

30. தன்னுணர்வு என்னும் ஆத்மப் பிரகாசம் தெளிவுற்ற ஜீவனுக்கு பந்தம் நீங்குகிறது. இதனையே 'வீடு' –முக்தி–மோட்சம் எனும் சொற்களில் சன்மார்க்கம் குறிப்பிடுகிறது. சஞ்சிதம் ஆகாமியம் பிராரப்தம் எனும் மூன்றும் இவனுக்கு உள்ளது என்று கூறுவது கற்பிதமே.

31. மனமே குண்டலினி, மனம் இல்லையேல் குண்டலினி (பிராண சக்தி) அசையாது.

32. நான் எனும் சங்கற்ப தியாகமே 'சந்நியாசம்' மற்று எதுவும் சந்நியாசமில்லை.

33. தான் ஆத்ம சொரூபம் என்பதை மறவாதிருத்தலே முடிவான நிலை. அதுவே 'சமாதி'

34. சூட்சும மனமும் தன்னில் இலயித்து சொரூபத்தின் அனுபவமும் கடந்து ஒன்றும் தோன்றாமல் ஆனந்தத்தில் மூழ்கி அம்மயமாயிருப்பதுவே 'தத்துவம்' 'அது நீ' (அருட்பெருஞ்ஜோதி) என்ற நிலை.

35. எல்லாம் பரம் பொருள். அது ஒன்றே உள்ளது என்ற பூரண அறிவின் நிரந்தரப் பலன் சாந்தி, சாந்தியை அமைதி என்னும் பொருள்படுத்தக் கூடாது. அமைதி (Peace) என்பது வெளியில் நிகழும் (சண்டை சச்சரவு இன்மை என்னும்) ஒரு நிகழ்வைக் குறிப்பதாகும்.

36. அருட்பெருஞ்ஜோதி அறிவிற்கறிவாயிருந்து தத்துவத்தைபுணர்த்தும்.

37. தனக்கு அந்நியமாய் தெய்வங்கள் இருக்கிறதென்று தியானிப்பது தன் நிழலை தன் காலால் அளக்க முயற்சிப்பதாகும். அது அஞ்ஞானம்.

38. தன்னையறிய நூல்களில் தேடவேண்டாம். நூல்களில் கற்றவை யாவையும் ஆத்ம மனோலயம் அடையும்போது மறக்க வேண்டி வரும். அங்கு மனத்திற்கும் புத்திக்கும் வேலையில்லாததலால்.

39. பந்தம், முக்தி யாருக்கு என்று விசாரித்தால் எனக்கு என்று தோன்றும். 'நான் யார்' என விசாரித்தால் 'நான்' இல்லை எனவும், சர்வ நினைவுகளும் ஒடுங்கி ஆத்மப்பிரகாசத்தில் 'நானும்' ஒடுங்கி ஆத்ம பிரகாசம் அருட்பெருஞ்ஜோதியாய் விளங்கும் என்று சன்மார்க்கம் கூறுகிறது.

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

Koviloor Digital Library

Koviloor Digital Library

சன்மார்க்க அன்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்

இந்த நூலைப் படித்த பின்பு மற்ற சன்மார்க்க அன்பர்களுக்கும் வழங்கி படிக்க உதவவும். விருப்பமுள்ள அன்பர்கள் இதனை மறுபதிப்புச் செய்து விநியோகிக்கவும். தயவு செய்து விற்பனை செய்ய வேண்டாம். வள்ளற் பெருமான் போதித்த சன்மார்க்க நெறியில் நிற்கவும்.